பொன்னி




வாழ்வளியுங்கள்

சிறந்ததொரு திட்டமான மதுவிலக்கை நடைமுறைக்குக் கொண்டுவந்த நம் சென்னை அரசினரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆனால் அத்திட்டம் அரைகுறையாக நிறைவேற்றப் பட்டிருப்பதறிய நாம் மிகமிகக் கவலையடைகிறோம். மதுவிலக்கு என்பது கள்ளுக்கடைகளை மூடிவிடுவது; கள்ளச் சாராயம் காய்ச்சாமல் கண்காணிப்பது என்ற அளவோடு நின்றுவிடுவதல்ல. மதுவாணிபத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்கு வேறு வேலை ஏற்படுத்தித் தருவதும் அத்திட்டத்திலே இணைந்ததுதான். ஆனால் சென்னை ஆட்சியினர் மரமேறிகளுக்கு வேலை தேடித்தருவதில் அவ்வளவு அக்கறை காட்டாததுதான் நமக்கு வருத்தத்தைத் தருகிறது. மதுவிலக்கினால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் மறைகிறது. ஏறக்குறைய 12,000 மதுமரத் தொழிலாளர்கள் வேலையற்று, தங்களைக் காத்துக்கொள்ள வகையற்று, உயிர்வாழ வழியற்றுத் திண்டாடுமாறு விட்டு வெறும் காகிதத் திட்டங்களிலும் புள்ளி விபரம் சேகரிப்பதிலுமே மதுவிலக்கு மந்திரியார் காலந்தள்ளுவாரானால், அத் தோழர்கள் எவ்வாறு காலந்தள்ள முடியும் என்று கேட்கிறோம். பட்டினிக்கும், நோய்க்கும் அவர்கள் பலியாவதைத் தவிர அவர்கட்கு வேறு போக்கென்ன என்று கேட்கிறோம்.

ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் காங்கிரஸ் ஆட்சியினர், அன்றாடம் காய்ச்சிகளாயுள்ள இத்தொழிலாளர்களுக்குச் செய்யும் நன்மை இதுதானா என்று கேட்கிறோம். வேலையற்றோராய் இத்தனை பெரிய தொகையினரை இருக்க விடுவது எத்தனை ஆபத்துக்கிடமென்பதை அரசினர் சிறிதும் உணர்ந்ததாக இல்லை. நாட்டிலே கொலையும் கொள்ளையும் பரவ இதைவிட வேறு சூழ்நிலை என்ன வேண்டும்? அத்தனை பேரும் "உண்ணாவிரத"மிருந்து மடிவார்கள் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

எனவே சென்னை அரசினர் இப்பிரச்னையை முதல் பிரச்னையாகக் கொண்டு, வடநாட்டு அகதிகளிடம் காட்டும் அக்கறையைப் போன்று, இவர்களையும் பாதுகாத்து வாழ்வளிக்கத் திட்டமிட வேண்டியதும் உடனே தாமதியாமல் செயலாற்ற வேண்டியதும் மிகமிக அவசரமும் அவசியமுமாகும். சர்க்காரின் எண்ணத்தில் எத்தனையோ போர்ப் பிற்காலத் திட்டங்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கென்று பணங்கூட ஒதுக்கி வைத்துள்ளார்கள். அத்தகைய திட்டங்களில் ஒன்றை உடனே தொடங்கி, மரமேறிகளை அவ்வேலையில் பயன்படுத்தித் தங்கள் திட்டத்தையும் நிறைவேற்றலாம்; மரமேறிகளுக்கு வாழ்வளிக்கும் வாய்ப்பும் கிடைக்கும். மேலும் குறைந்த பட்சம் ஆறுமாத வரையிலேனும் அவர்கள் உணவுடைக்குச் சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்டால் அவர்கள் தக்க வேலைகளைத் தாங்களாகவே தேடிக்கொள்ளவும் முடியும். "திட்டம் என்ன?" என்று தேடிக்கொண்டிராமல் எல்லாக் கட்சியினரடங்கிய கமிட்டி யொன்றை ஏற்படுத்தி அக்கமிட்டி கையில் இப்பொறுப்பை விடுவதுதான் பொருத்தமாகும். அக்கமிட்டி செயலாற்ற, வேண்டிய பணவசதி யளிக்கவும் அரசினர் தயாராயிருக்க வேண்டும். இம்முயற்சியில் சர்க்கார் தலைப்படுமானால் மரமேறிகளுக்கு வாழ்வுண்டு; நாட்டுக்கும் நலனுண்டு.



காலமும் கருத்தும்

பாராட்டுகிறோம்

சர். சி. வி. ராமன், சர். கே. எஸ். கிருஷ்ணன் போன்றாரையே நாடித் தவமிருந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அவர்கள் மறுத்தபின்னரேனும் தோழர் டாக்டர் மணவாள ராமாநுஜம் அவர்களைத் தேர்ந்தெடுத்தது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அறிவியல் நிபுணரென்ற முறையில் முதன்முதலாகத் துணைவேந்தராகும் வாய்ப்பு தோழர் ராமாநுஜம் அவர்கட்குக் கிடைத்தது குறித்துக் களிப்படைகிறோம். 'தமிழர்' பல்கலைக் கழகம் 'தமிழர்' பல்கலைக் கழகமாகவே நடைபெற வேண்டுமென்று பலரும எண்ணுகிற இவ்வேளையில் மாற்றார் கையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிக்காமல் அறிஞர் ராமாநுஜம் மேற்பார்வைக்கு வந்தது பாராட்டப்பட வேண்டியதாகும். திறமையும் விளம்பரம் விரும்பா உளப்பாங்கும்கொண்ட புதுத் துணைவேந்தரின் ஆட்சியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் சிறந்தோங்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

'குயில்' கூடாதாம்!

சென்னை ஆட்சியினர்போக்கு வரவர அதிசயம் தரத்தக்க வகையில் மாறிக் கொண்டிருக்கிறது. இல்லையேல் 'குயில்' கூடாது என்று அவர்கள் கட்டளை பிறக்குமா? காக்கையின் இசை சிறக்க வேண்டுமானால் குயிலுக்குத் தடைவிதித்தால் தான் முடியும். அத்தகைய அர்த்தமற்ற போக்கைத்தான் சென்னை அரசினர் மேற்கொண்டுள்ளனர். புதுச்சேரியினின்றும் 'குயில்' எனவொருகவிதை இதழ் புரட்சிக்கவிஞரை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது. புரட்சிக் கவிஞரின் கவிதை வளம் யாவரும் அறிந்தது. நிகர்யாருமில்லையெனச் சிறப்புற்று விளங்கும் கவிஞர் கோமான் பாரதிதாசனார். அவர்தம் கவிதைகள் மக்களை ஆட்கொண்டன என்பதற்குச் சான்று சென்னையில் பெருந்திரளிடையே நடந்த நிதியளிப்பு விழாவேயாகும். அத்தகைய கவியரசரின் கவிதை இதழுக்கு, திங்கள்தோறும் தித்திக்கும் கவிதைகளைத் தந்துவரும் ஏட்டுக்குச் சென்னை ஆட்சி தடை விதித்துள்ளதென்றால் இதைவிட வேறு கொடுமை என்னவேண்டும்? கல்வி மந்திரியார் தமிழ்க் கவி ஏற்படுத்தப் போவதாகப் பறைசாற்றுகிறாரே, இதுதானா கவிக்குப் பரிசளிக்கும் போக்கு என்று அவரைக் கேட்கிறோம்.

திரைமறைவில் கட்டளை!

மைசூரிலும் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாய இந்தி எற்

படுத்த முயற்சிகள் நடைபெறுவதாகச் செய்தி வந்திருக்கிறது. அச் செய்தியிலேயே காணப்படுகின்ற ஒரு குறிப்புத்தான் நம்மைத் திகைக்க வைக்கிறது. இந்தியைப் பரப்பும் வகையில் மைசூர் சர்க்கார் என்னென்ன ஏற்பாடுகள் செய்துள்ளனர் என்று டில்லி சர்க்கார் அறிய விரும்புவதாக அக்குறிப்பில்காணப்படுகிறது. பண்டிதர் நேரு முதலானோர் இந்தியைக் கட்டாயப் படுத்தப் போவதில்லையென்று வாய்ப்பறை சாற்றிவிட்டுத் திரைமறைவில் இத்தகைய உத்தரவுகளை அனுப்புவது எவ்விதம் நேர்மையாகுமென்று நமக்குத் தெரியவில்லை. இந் நிகழ்ச்சியிலிருந்து சென்னை அரசினர் இந்தித் திட்டமும் மேலிடத்தினின்று திணிக்கப்பட்டதென்றே நாம் உணரலாம். நேரு சர்க்காரின் சொல்லொன்றுசெயலொன்றாய் நிகழ்வது நாம் எதிர்பார்த்தது தான் என்றாலும், இந்தி எதிர்ப்புப் போர் நடைபெறும் இந் நாட்களில் இத்தகைய திரைமறைவு நாடகங்கள் விளக்கம் பெறுவது அவசியமென்பதற்கே இதனைக் குறிப்பிடுகிறோம்.

கோவில்பட்டி வழிகாட்டுகிறது!

கோவில்பட்டி நகரசபைத் தலைவர் தோழர் ச. வெ. அ. வள்ளிமுத்து மற்றும் ஆறு தோழர்கள் மீது தொடரப்பட்ட ஜாமீன்வழக்கில் இடைக்கால நன்னடத்தை ஜாமீன் கட்டும்படி கோரப்பட்டது.



இந்தியைத் தேசிய மொழியாக்கிவிட வேண்டுமென்று ஐக்கிய மாகாண, பீகார் வாசிகள் சிலர் துடியாய்த் துடிக்கின்றனர்.

— சங்கர்ஸ் வீக்லி

இலக்கியத்தில் காதல்

‘சகி’

காதல் மணங்கமழும் கதைகள் எழுதுகின்ற எழுத்தாளர்களுக்குக் கலியாணம் ஆகும் போது, “ஐயா இது காதலா? இல்லை பெற்றோர்கள் திருமணமா?” என்று நான் கேட்பது மரபு. அவர்கள் இலக்கியத்திற்குக் காதலையும், வாழ்க்கைக்குக் கலியாணத்தையும் கைக்கொண்டதாகவே சொல்லுவார்கள். பாரதியார் முதல் பண்டைப் புலவர்கள் ஈறாகக் காதலின் தெய்வீகத்தைப் புனித புண்யார்த்தத்தைப் பாடி இருக்கிறார்கள். நமக்கு ரொம்பவும் தெரிந்தவரிகள்

காதல் காதல் காதல் — இன்றேல்
சாதல் சாதல் சாதல்

இப்படி இலக்கியத்தில் காதலைக் கண்டதும் நாம் கை கொட்டுகிறோம்; எக்களிக்கிறோம். ஆனந்த வாரிதியில் மிதக்கின்றோம். அப்படியென்ன அது அவ்வளவு உயர்ந்த பண்பா? இல்லறத்தை வெறுத்து நல்லறம் பூண்ட துறவிகள், வேதாந்திகள் எல்லோரும் கை கூப்பி வணங்கும் சொல்லாக இருக்கிறது, வெவ்வேறு பொருள்களில் இருக்கிறது காதல்.

காதல், அன்பு என்ற அடிப்படையில் பிறந்த சொல். “கடந்த பேர்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல்” என்றார் புகழேந்தி. நண்பனையும் காதலன் என்று அழைக்கும் பொருளில் கம்பன் எடுத்தாண்டுள்ளான். “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி” என்று பக்தியில் ஈசனை அழைப்பதும் காதல். இலக்கியத்தில் தலை சிறந்த அன்பைக் குறிக்க, இலக்கிய ஆசிரியர்கள் காதல் என்ற சொல்லையே வழங்கி வந்தார்கள்.

நாளாவட்டத்தில் “காதல்” ஆண் பெண் இருவருக்குமுள்ள அன்பைக் குறிக்கும் சொல்லாக மாறி, தோழமை, மக்கள் பாசம் என்ற பொருள், போயேவிட்டது.

பெண்ணின்றி ஆணும், ஆணின்றி பெண்ணும், வாழ முடியாதென்று; ஏற்படுகிற பாசத்தின் பிணைப்பு காதல். இந்த பாசத் தளையை உணராத அலிகளையும், உணர்ந்தும் வெற்றியடைந்த முனிவர்களையும் அன்று முதல் இன்று வரை காண்கிறோம். மனித வாழ்வின் சாயலைப் பிரதிபலிக்கவந்துள்ள இலக்கியத்தில் மனித உள்ளங்களின் இந்தக் காதல் போராட்டங்கள் சித்தரிக்கப்படுகின்றன.

உலக பந்தந்தினின்று, விலகிப் போய்விட்ட ஞானியும்,

இல்வாழ்க்கையைத் துறந்த துறவியும் மனித சமுதாயத்திற்காகக் காவியங்களும் அறநூல்களும் எழுத முனைந்த போது, காதலைக் கனிவித்தும் கடிந்தும் எழுதிச் சென்றனர். இங்ஙனம் எழுதிய பழமை நூலாசிரியர்கள், பெரும்பாலும் ஆடவர்களாக இருந்த காரணத்தால் பெண்மைக்கே பெருமையும் சிறுமையும் பெய்து விட்டனர்!

மஞ்சொக்கும் அளக ஓதி
மழை ஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய
பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில்
அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும்
கடலினும் பெரிய கண்கள்.

என்று பெண்மையின் அழகில் மூழ்கிவர்ணிக்கும் கம்பனும் அதே அழகை,

தக்க தலையோட்டின் முளைத் தெழுந்த
சிக்கின மயிரைத் திரள் முகிலென்றும்;
முள்ளுங்கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங்காலைப் பஞ்சென வுரைத்தும்;
வெள்ளெலும்பாலே மேவிய கணைகால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்து;
வெப்பு முத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய் மலரென்றும்;
தண்ணீர், பீளை தவிரா தொழுகும்;
கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்;

இப்படியாகப் பட்டினத்தாரும் அருமைத் தாயுமானவரும் பெண்ணை அப்பட்டமாக வருணித்துள்ளார்கள். இருந்தாலும் மக்கள் குலம் அழிந்து விடவில்லை; தேவைக்கதிகமாகப் பெருகிக் கொண்டுதான் வருகிறது. இப்படி நட்பு — அன்பு — காதல் ஏற்படப் பல வழிகள் உண்டு.

காளைப்பருவம் எய்திய ஆண் மகனும் — மங்கைப் பருவம் அடைந்த பெண் மகளும் உறவு முறை காரணமாவோ, அல்லது நட்புரிமை காரணமாகவோ, வீரத்தின் வியப்பு காரணமாகவோ, ஒன்றுமில்லாது போனால் உடலழகின் காந்தியினாலோ கவர்ச்சி ஏற்பட்டு, மனமொத்துப் போகிறார்கள். இந்த நாள் கதைகளில், வண்டி, மோட்டார். சைக்கிள் விபத்திலிருந்துகாப்பாற்றிவிட்டு, அல்லது பணம் உத்தியோகம் முதலான உதவி புரிந்து காதலைப் படைக்கிறார்கள். அந் நாளில் சோலையில் வேட்டையாடவந்து தலைவனின் வீரப்பிரதாபத்தை அறிந்து காதல் கொண்டதாகவோ, யானையோ, புலியோ துரத்திவர அவளைத் தலைவன் காப்பாற்றியதாகவோ, கதை புனைவார்கள். சிற்பம்' சித்திரம் சங்கீதம் முதலிய நற்கலைகளில் பிரியங்கொண்டு மனம் ஒன்றி விடுகிறதும் காதல் இலக்கியத்துக்கு வித்துக்கள்.

தமிழகத்தில் காதல்மணமோ முன்னாளில் நிகழ்ந்தது. அன்று காமதேவனை வழி படுவதும், இன்று காமன் பண்டிகை கொண்டாடுவதும், தமிழகத்தில் உற்சாகமாக நடைபெறும் விளையாட்டு. இதைத்தான் சிலப்பதிகாரத்தில்,

கடலொடு காவிரி சென்ற லைக்கும்
முன்றில்
காமவேள் கோட்டம் தொழுதார்
கணவரொடு

என்று வர்ணிக்கப்படுகிறது. இருஉள்ளங்கள் ஒன்றுவது

இலக்கியம்; இரு உடல்கள் ஒன்றுவது இன்ப நூல். கொக்கோக நூலிலே, உணர்ச்சிக்கு இடமில்லை. அது வெறும் கணக்கு; எதார்த்தம். கற்பனையைக் கொக்கோகத்தில் எதிர் பார்க்க முடியாது; இலக்கியத்திற்குள் இறங்கிவிட்டால் மன விரிவுகளை, துள்ளித்திரியும் இன்ப துன்ப உணர்ச்சிக் கொப்பளங்களைக் காணலாம்.

உள்ளம் பறித்தது நான் என்பதும்
—என்றன்
உயிர் பறித்தது நீ என்பதும்
கிள்ளி உரிஞ்சிடும் மாமலர்த்தேன்
—இன்பக்
கேணியிற் கண்டிட வேறுமெஃருள்
துள்ளி எழுந்தனள் சுந்தரன்தான்!
—பசுந்
தோகை பறந்தனள் காதலன்மேல்
வெள்ளத்திலே டொரு வெள்ளமுமாய்
—நல்ல
வீணையும் நாதமும் ஆகிவிட்டார்!
(பாரதிதாசன்)

இதுபோன்ற வர்ணனை, இலக்கிய நலம் தோய்ந்த காவிய வர்ணனை.

காதலர்கள் கற்பனைசாலிகள். சாதாரணமாக ஒருவர் உருவம் மற்றவர்களுக்கு — பட்டினத்தார் வர்ணிக்கிற மாதிரி — தோற்றம் தருகிறதில்லை. அப்பட்டமாகக் காதலில் சிக்குண்டவர்களுக்குத் தெரியாது. மாயத் தோற்றங்கள் புலனாகும். அது பெரிய பைத்தியககார இன்ப உலகம். இந்திரன் சந்திரனாகவும், அரம்பை ஊர்வசியாகவும், கூடு விட்டுக் கூடுபாயும் விநோத உலகம். முகம் தாமரையாகவும், கண் கடலாகவும், கூந்தல் மேகமாகவும், பல் வெண் முத்து மல்லிகை மொட்டாகவும், உதடு பவளம், செவ்வாம்பல், ரோஜாவாகவும் தெரியும். மேகத்தையும் கிளி, மைனாவையும் தூது அனுப்பத் துணிவார்கள். சூரியனும் சந்திரனும் பௌதிக சாஸ்திரியின் கண்களில் படுகிறபடி படுமா? அதற்குள்ளாகத் தாபங்கள் கோபங்கள், பாவங்கள், கும்மாளங்கள் எவ்வளவு எவ்வளவோ! நிலா, காற்று, மாலை முதலான பொருள்களிலே, எவ்வளவோ அற்புதங்கள் பொதிந்து உள்ளனவாகத் தெரியும். கூடல் காலத்தில் நிலாவும் நீரும் அமுத வெள்ளம்; ஆனால் பிரிவினையிலோ பாவி நிலவாகவும், துக்க வெள்ளமாகவும வர்ணிப்பார்கள். இப்படிக் கற்பனைப்புரவியில் பறக்கும் குணம் காதலர்களுக்கு உண்டு; அதனைத் திறமையுடன் உணர்த்தும் திறம் இலக்கிய கர்த்தாவுக்கு உண்டு. காதலின் பெருமை, சேற்றில் உழலும் உழவன் முதல், சிங்காரமண்டபத்திலே கொலுவிருக்கும் அரசன் வரை உண்டென்பதைக் கவிஞர்கள், வளமாகப் பாடி விட்டார்கள். உடல் பசியைப்போல எல்லோருக்கும் உள்ளப் பசியும் பொது.

காதல் பிரபந்தங்கள் என்றே பல நூல்கள் தமிழில் இருக்கின்றன. இருந்தாலும் முத்தொள்ளாயிர ஆசிரியர் உள்ளத்துணர்ச்சிகளைக் கற்பனைத்தறியில் அழகழகாக நெய்துள்ளார். பெரும் பகுதி நம்முடைய கற்பனைக்கு விடப்படுகிற முத்தொள்ளாயிரப் பாடலுள் ஒன்றைப் பாருங்கள்.

எனாஅ மடப்பிடியே!
எங்கூடல் கோமான்,

புலா அல் நெடு நல்வேல்
மாறன், உலா அங்கால்!
பைய நடக்கவும்
தேற்றியால், நின்பெண்மை
ஐயப் படுவது
உடைத்து!

[யானை மீது வருகிற தன் காதலனைக் கண் குளிரப்பார்க்க ஆசைப்பட்டு 'அட! பெண் யானையாக இருந்தும் இப்படி ஓடினால், பெண்ணாய்ப்பிறந்த ஜன்மமா என்று ஐயப்படுவார்கள்' என்பது பாவம். உயர்ந்த காதலின் தன்மையை விளக்கும் கவிதை. யானைமீது வருகிறவனைக் கண்குளிர அதிகநேரம் பார்த்துத் தான் அனுபவிக்க வேண்டுமென்பதைச் சொல்லாது, பெண் யானைமீது ஒரு கஜப் புழுகைப் புழுகுவது, கற்பனையையும் காதலையும் பின்னும் கவியின் திறமையை விளக்குகிறது.]

ஒரு ஆண்-ஒருபெண், என்ற நியதிக்குப் புறம்பாக வருகிற இலக்கியத்தை எந்த ஆசிரியனும் எழுத முற்படுவதில்லை. எப்போதுமே இலக்கியத்தின் குறிக்கோள் இன்பமாக இருந்தாலும், அதிலே உண்மை, நேர்மை, நியாயம் என்ற பண்பாடுகள் மூலமாக மனவிதானத்திலே இன்ப நிலவொளியைப் பதித்து விடுவார்கள். வாழ்க்கையில் இப்படி நடக்கிறதா? தென்றலும், தெள்ளிசையும், தேன்மொழியும் தானா வாழ்க்கை? எத்தனையோ கோரங்கள், விபரீதங்கள் நிகழவில்லையா? மனித மனத்திலே ஆசாபாசங்களைவிட, ஆபாசங்கள் அதிகமில்லையா? வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது இலக்கியம் என்று சொல்லிவிட்டு, இந்த ஒளிப்பு மறைப்பு ஏன்?-இது இன்றைய இலக்கிய ரஸிகர்களின் கேள்வி?

ரெயிலில் பிரயாணம் செய்யுமுன், டிக்கெட் எடுக்க வேண்டுமென்பது நியதி, இதில் தவறுகிறவர்களே பிரயாணிகள் என்று நம் சமுகத்தில் ஒப்புக் கொள்வோமா? டிக்கெட் இன்றிப் போவோர்களை மட்டரகப் பேர்வழிகள் சமூக விரோதிகள் என்றே அழைப்போம். டிக்கெட் இல்லாமலே பிரயாணம் செய்கிற டிக்கட் பரிசோதகன், நம்மிடமுள்ள மனிதத்தன்மையை உயர்த்தவருகிறவன்; தாழ்த்த வருகிறனல்ல. அவனைப் பார்த்து. "நீ டிக்கெட் வைத்து கொள்ளவில்லையோ" என நாம கேட்கிறதும் இல்லை. சிலபேர் சொந்த வாழ்க்கையில் தவறியிருந்தாலும் இலக்கியத்தில் நேர்மையைப் போற்றியே ஆக வேண்டுமென்பதும், காமம, கயமை, பகைமை முதலான துர்க்குணங்களைப் பழித்தும், காதல், தூய்மை, அன்பு முதலான நற்குணங்களைச் சிறப்பித்தும்எழுதல்,சமூக நன்மைக்காக, மக்கள் குலநலனுக்காகக் கடமையாகிவிட்டது. ஆனால் இன்றைய சிறுகதை உலகில், பச்சை பச்சையாக அப்படி அப்படியே வாழ்வை ரத்தக் களரி ஆக்கிக்காட்டுவது இலக்கியமாகி வருகிறது. இது தவறு என்பது அறிஞர்களின் கருத்து. "வரவேற்க வேண்டிய அம்சம்" என்பது புதுமை விற்பன்னர்களின் கருத்து.

தீய குணங்கள், மனித இதயத்தில் களையைப் போல ஒளிந்திருக்கின்றன. பயிரை ஊன்றித் தண்ணீர் விலகிய

பயிரை வளரவிடாது அமுக்கு கின்றன; தீங்கிழைக்கின்றன. பிறருடைய தூண்டுதல், தயவு இல்லாமலே, நமது தீய குணங் கள் எப்போதும் கிளைக்கக் கூடிய தன்மையில் இருக்கிற போது, காமாந்தகரமான காட் சிகளையோ மட்டரகமான சுவை களையோ, ஆபாசமான சொற் களையோ இலக்கியத்தில் புக விடுவது சரியல்ல. ஏனெனில் காதலும் காமமும், இலக்கிய நூலையும் கொக்கோக சாஸ்த்தி ரத்தையும் படித்தறிந்த மேதா விகளை மட்டும் பிடிக்கவில்லை. கல்வி வாசனையற்றவர்களையும் மனித உணர்ச்சியுள்ள எவரை யும் பிடிக்கும் கல்லாக்கலை; சொல்லித் தெரிவதும் அல்ல.

ஆனால், சொல்லித் தெரிய வேண்டியது நேர்மையும் கட மையும, அன்பும் அடக்கமும், ஆசையும் பாசமும்......இன் னோரன்ன. இதைத்தான் காவிய ரீதியாக எழுந்த நள வெண்பா, சிலப்பதிகாரம்,மணி மேகலை முதலான இலக்கியங் கள் சொல்லுகின்றன; காதல் வேறு, காமம்வேறு என்பதாக எதனால் தீமை என்ற சர்ச்சை செய்யாமல் ஒதுக்கி விட்டார் கள், முன்னாளில்.

வள்ளுவர்காலம்வரை காமம் என்ற சொல் சிறப்பாகக் காத லையே உணர்த்தியது. இல்லா விடில் காமத்துப் பால் என்று இன்பத்தைக் கூறி இருக்கமாட் டார். இன்பம் என்பதை காமம் என்ற சொல் விளக்கிவந்த, நாளடைவில் சொற்களுக்கு ஏற்படுகிற வளர்ச்சியைய யொட்டி, காமம் என்பது தகாத இன்பம் என்றும், ஒழுக்கத்தோடு நிறைந்த தூய இன்பம் என்பதாகவும் இலக் கியத்தில் வேரூன்றின. காத லுக்கும் காமத்துக்கும் பிணைப்பு ஏற்பட்டுப் புதிய அர்த்தம் பிறந்தது.

காதல், உனக்காகவாழமுயற் சிக்கிறேன் என்ற மனநிலையைச் சார்ந்த சிந்தனை. "மாறி இநயம் புக்கு எய்துதல்" காதலின் இலக் கணம் என்பது கம்பர் காலத் தும் அவருக்குப் பின் வந்தவர் களது கொள்கையுமாம். அதற்கு முந்திய காலத்திலும் காமத்துக்கு இதே பொருள். ஆனால். பிந்திய காலத்தில் காமத்திற்குப் புதுஇலக்கணம் உண்டாயிற்று. தனக்கு வேண் டும் என்ற பேராசை காரண மாக, பிறருடைய மனத்தையறி யும் தன்மையிழந்த கீழ்த்தர உணர்ச்சியாகிவிட்டது. காதல் உள்ளத்து உறவு, காமம் உடல் உறவு. தியாகமும் பேரா சையும் காதல். காமம என்ற குணங்களாகப் பகுப்பட்டன.

......கண் வழிப்புகுந்த காதல் நோய்
பாலுறுபிரையெனப் பரந்த தெங்குமே
—கம்பன்

காதல், பாலில் பட்ட பிரை போல மெதுவாக உடலெல்லாம் புளகாங்கிதம் தரும்.

......காமக் கருங்கனல் மூண்டதால்,
வழிந்த நாகத்தின் வன்றெனா
வாளெயிற் று
இழிந்த கார்விட மேறுவ தென்னவோ
—கம்பன்

காமமோ பாம்பின் விஷம் போல ஒரு விநாடியில் தகித்து விடும். காதலுக்கு இலக்கான வர்கள தியாக உள்ளம்கொண்

டவர்களாகவும், காமத்துக்கு உள்ளானவர்கள் கொலை நெஞ்சு கொண்டவர்களாகவும் இருப்பதை அன்றாட வாழ்விலும் காணலாம். உலகிலே அன்பு, சாந்தம், இன்பம் நிலவ வேண்டுமென்ற எண்ணத்தில் காதலர்களின் களிப்பு, விளையாட்டு, மனப்பூசல், முதலானவைகளையே கவிஞர்கள் எழுதினார்கள். காமத்தின் அருகில் போய், பயங்கரத்தையும் அருவருப்பையும் கொலைகார எண்ணத்தையும் இன்றைய ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். காரணம், வாழ்க்கை முறையில் மாறுபாடும் நம்பிக்கைகளில் குழப்பமும் ஏற்பட்டதேயாகும்.

யாருக்குமே சுலபமாக உடம்பிலே தெம்பையும் விறுவிறுப்பையும் துரித காலத்தில் தரக்கூடிய சக்தி காமத்துக்கும், தாமத மாகத்தரக்கூடிய சக்தி காதலுக்கும் உண்டென்பதை உணர்ந்து இரண்டையும் விரவியே நூல்களில் தந்தார்கள்! காமத்தின் கேட்டை விளக்க வந்தால், இலக்கியச் சுவையை அனுபவித்து விட்டு, கேட்டை மறந்து விடுகிறது, நம் நெஞ்சம்! இருந்தாலும் காதல் என்ற போர்வைக்குள்ளாகத் துணிந்து கொக்கோக லீலைகளையும், சரஸ சல்லாபங்களையும் கூளப்ப நாயக்கன் காதல், (சகித்துக் கொள்ளக் கூடியது) விறலி விடு தூது (சகிக்க முடியாதது) போன்ற நூல்களில் காதல் எனச் சொல்லப்படுவது காமுகமானவர்ணனைகள்.

விறலிவிடுதூதைப் படித்து இலக்கியப் பேரின்பம் அடைவது, விளம்பரம் செய்யப்படுகிற தாது புஷ்டி மாத்திரைகள் லேகியங்களை உண்டு, இளமையைப் பெற்று விட்டதாக நினைக்கிற நினைப்புத்தான். சில்லறையான புத்தி. உயர்ந்த மனப் பண்பு தரும் நூல்களையே எத்துறையிலும் முக்கியமாகக் காதல்துறையில் படிக்க வேண்டுமென்பது அறிஞர்கள் கருத்து.

ஏனைய நூல்களில் இலைமறைவு காய்மறைவாகக் காம வர்ணனைகள் வரும். ஆயினும் முடிவில், "நன்மை செயதவன் நன்மையேயடைவான்" என்ற நீதி வாக்கியப்படி காதலுக்கே முத்தாய்ப்பு வைத்து விடுவார்கள்.

முன்னாளில், மதமும் சட்டமும் மனித ஒழுக்கத்திற்கு வேலிகட்ட எழுந்தது போல இலக்கிய ஆசிரியர்களும், வேலியாக இருந்து வந்தனர். இன்று எல்லாத் துறைகளிலும், வாழ்கை முறைகளிலும் புரட்சி ஏற்பட்டுத் தகர்ந்து வருவதைப் போன்று இலக்கியக் காதலுக்குச் சனி பிடித்து, அப்பட்டமாக அன்றாட விவகாரங்களை உள்ளதை மூடி மறைக்காமல், திறந்த மேனியாய் மனப் பிசாசின்கோரத் தாண்டவத்தை எழுதிவிடுகிறார்கள். வயிற்றுப்பசியைப் போல உள்ளப்பசியைச் சந்திசிரிக்க விடலாமா? இது சரியா என்பது வரப் போகிறகாலம் தீர்மானிக்க வேண்டிய விஷயம்

வளர விடலாமா என்று யோசிக்க வேண்டாம். கப்பும் கிளையுமாக அது தளைத்து வருகிறது. வேரூன்றிப் படரவேண்டியதுதான் பாக்கி! ○

இயந்திரம்

தமிழரசன்

டிக்......டிக்......டிக்......

விரைந்து செல்லும் கால தேவனின் காலடி ஓசையைப் போல, சுவற்றிலே மாட்டியிருந்த கடிகாரம் ஒலித்துக் கொண்டிருந்தது. மங்கலாக எரிந்துகொண்டிருக்கும் விளக்கின் முன்னால் அவன் இருந்தான். அவனுக்குமுன் ஆபீஸ் கட்டுகள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்ருகப் புரட்டிய வண்ணம் எழுதிக் கொண்டே இருந்தான்.

கடிகாரத்தின் இரண்டு முட்களும்சேர்ந்து காலத்தை வேகமாக விரட்டிக்கொண்டிருந்தன.

மணி ஒன்று.

"அத்தான்!"—ஒரு மெல்லிய குரல். அவன் மனைவிதான்.

அவன் எழுதிக்கொண்டே இருந்தான்.

மீண்டுமோர் அழைப்பு!

அவன் லேசாகத் தலையை நிமிர்த்தினன். எதிரே அவள் தனது முத்துப் பற்களைக் காட்டி மோகனச் சிரிப்போடு நின்ருள். அந்தச் சிரிப்பிலே காமத்தின் கனிவு தென்பட்டது. பதிலுக்கு அவனும் ஒரு புன்சிரிப்பை 'வாங்தி' யெடுத்தான்.

"பானு"

"ஹூம்"

"இன்னும் தூங்கலேயா?"

அவள் பதில் சொல்லவில்லை தன் அகண்ட கண்களால் அவனையே பார்த்தாள். அவன் கையிலிருந்தபேனு மேஜையிலே விழுந்தது.

"இரவு முழுதும் விழித்துக் கொண்டே யிருந்தால் உடம்புக்கு என்னவாகும்?" என்று கேட்டுக்கொண்டே, அவன் பின்னல் நின்றுகொண்டு, தனது மலர்க் கரங்களால் அவன் தலையை வருடினுள். பிறகு குனிந்து அவன நெற்றியிலே முத்தமிட்டாள்.

"பானு"

"ஏன்"

"நீ போய்ப்படு"

"நீங்கள்?"

அவன மௌனஞ் சாதித்தான. தனிமையான நேரம்; இரவுவேளை; அவளின் காமப் பார்வை; பேச்சு—இந்த நிலையில் அவனுக்கு 'அந்த' உணர்ச்சி வராமலிருக்க முடியுமா? நாற்காலியைவிட்டு எழுந்தான். ஆனல்... அவன் தயங்கினன்.

ஆபீஸ் கட்டுகள் அவனை முறைத்துக் கொண்டிருந்தன. எதிரே ஆபீஸ் மானேஜரின் உருவம் உறுமிக்கொண்டு நின்றது. இன்றைக்குள் இவற்றை முடிக்காவிட்டால்......

பாவம்! அவன் அசந்து போய் உட்கார்ந்துவிட்டான்!

"ஏன், விளக்கை அணைத்து விடட்டுமா?" என்ருள் அவள.

"பானு, விளையாடாதே" என்றுசொல்லிவிட்டுபேனவை எடுத்தான். இப்பொழுது அவன் குரலிலே கடுகடுப்பு இருந்தது.

மீண்டும் அறையிலே நிசப்தம்! கடிகாரம் தனது கடமையைச் செய்துகொண்டிருந்தது ஆம், அது ஒரு யந்திரம்!

அவனும் தனது கடமையைச் செய்ய ஆரம்பித்தான்!

டிக்...... டிக்...... டிக்.......



வாத்தியாரம்மா

இளமைப்பித்தன்

வாத்தியாரம்மாவானல் என்ன? அவளுடைய வாழ்வில் சுக, துக்கமென்பது இருக்காதா? கோடானுகோடி மனிதப்பிராணிகளில் அவளும் ஒருத்திதானே! துன்பத்தைத் தாங்கக்கூடிய மனத்தில், இன்பத்தையும் ஏற்றிக்கொள்ள இடம் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? 'முடியாது' என்ற முத்திரையைக் குத்திக்கொண்டாலும் 'வயதும வாலிபக் கோளாறும்' சேர்ந்துகொண்டு அதை என்றைக்காவது ஒரு நாள் ஒப்புக்கொள்ளவைக்கத் தானே தூண்டிவிடும்?

தங்கம் 'வாத்தியாரம்மா'வாக மாறி ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் மறைந்துபோய் விட்டன. மணமே வேண்டாமென்று சொல்லிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறிப் பள்ளிக்கூட உலகத்திற்குள் வந்து விழுந்தாள். உலகப் பிணைப்புகளை அறுத்துக்கொண்டு ஓடும் துறவிகளின் மனத்தில் படிந்த உறுதி மனத்தைப் பொருத்த வரையில் தங்கத்தின் மனத்திலும் கிட்டத்தட்ட அப்படியேதான் இருந்தது!

அவளுக்குச் சுமார் இருபத்தைந்து வயதுதான் இருக்கும்! நல்ல கட்டுத் தளராத உடல்! கபடம் நிறைந்த ஆண்களின் மனத்தை ஊடுருவிப் பார்த்துப் பார்த்து அனுபவரேகை பாய்ந்த கண்கள்! தான் தூய்மையானவளென்பதைச் சந்தேகமும், சபலமும் கொண்டவர்களுக்குச் 'சட்'டென்று புரியவைக்கவேண்டியோ, என்னவோ எப்பொழுதும் உடம்பைச் சுற்றிக்கொண்டிருந்தது ஓர் வெள்ளைப் புடவை! ஆண்களின் அற்பத்தனமான 'தசைஆசைக்குப்' பலியாகிறவளில்லை என்று சொல்லுகிற மாதிரி மிடுக்கான நடை!

அன்று வழக்கம்போல வகுப்பிற்குள் வந்து நுழைந்தாள் தங்கம்! பரீட்சை முடிந்து பள்ளிக்கூடம் திறந்து இரண்டு நாட்களுக்குமேலேயே ஓடிவிட்டன! தேர்ச்சி வெள்ளத்தில் மேல் வகுப்புக்கு மாறிய பெண்களைத் தவிர எஞ்சி நின்றவர் இரண்டு மூன்று பெண்கள் தாம்! அந்த முகங்களைத் தவிர மற்றவை யெல்லாம் புதியவை, அதுவும் நாளுக்கு நாள் புது 'அட்மிஷன்' என்ற போக்கில் ஒவ்வொன்ருய் வந்துசேர்ந்து கொண்டிருந்தன! இவையெல்லாம் பார்த்துச் சலித்துப் போன விஷயங்கள்!

தங்கம் உள்ளே வந்து நாற்காலியின்மேல் உட்கார்ந்தாள்! மரியாதைக்காக எழுந்துநின்ற பெண்களும், அவாவர்களுடைய இடத்தில் உட்கார்ந்தார்கள்!

மாணவிகளின், பெயர்களைக் காட்டும் புத்தகத்தைப்பிரித்து வரிசையாகக் கூப்பிட்டாள்! வகுப்பில் இக்குக்கொரு குர லாக எழுந்து ஓய்ந்தது! இன் னும் ஒரு இடம் காலியிருக்கி றது! அதற்கும்ஒரு 'பெண்' வந்து விட்டால், வகுப்பைச் சரிவர ஆரம்பித்து நடத்திக் கொண்டு போகலாம்; ஆனால் யார்வந்து என்றைக்கு உட்கா ரப போகிறாளோ?" என்றது அவள் மனம்!

ரகுநாதன், தன் தங்கையை அழைத்துக்கொண்டு வந்து அங்கே நுழைந்தான். தங்கத் திடம பதிவுச் சிட்டைக்காட்டி னான். ரிஜிஸ்தரில் 'செல்லம்' என்ற பெயர் குறிக்கப்பட்டது.

நினைத்தவுடன் தன் ஆசை நிறைவேறி விட்டதைக் குறித் துத் தங்கம் மனத்துக்குள் ளாகவே மகிழ்ந்துகொண்டாள் காலியாக இருந்த இடத்தில் செல்லம் போய் உட்கார்ந்து விட்டாள்!

ரகுநாதன் மெல்லிய குரலில் தங்கத்துடன் பேச ஆரம்பித் தான்.

"செல்லம் என் தங்கை!"

"அப்படியா?"

"சிறுசு! விளையாட்டுப்புத்தி அதிகம்!"

"அதெல்லாம் குழந்தைக ளுக்கு உள்ளதுதானே!"

"நீங்கதான் கொஞ்சம் கவ னித்துக் கொள்ளணும்"

"ம்......அப்புறம்?'

"ஒழிந்த வேளையிலே 'டியூ ஷன்' சொல்லிக்கொடுத்தால் நல்லது. சாயந்திர நேரமே போதும்!"

"சரி! அவளிடம் இதைப் பற்றி சொல்லியனுப்புகிறேன்"

"தாராளமாய்ச் செய்யுங் கள்!"

ரகுநாதன் வகுப்பைவிட்டு வெளியேறினன்! வெட்டுமின் னலாகப் பதில் சொன்ன தங் கத்தின் மனத்தை அவன் நல்லவளா, கெட்டவளா" என்று துழாவிப் பார்க்க விரும்பவில்லை! ஊரே ஒன்று சேர்ந்துதான் அவளுக்குத் தங்கம் தங்கமானவள்' என்று பெயர் சூட்டியிருக்கிறதே!

வகுப்புக்குப் புதிதாக வந்த செல்லத்தைப் பார்த்து, எல் லாப் பெண்களுடைய கண்க ளும், ஏறி இறங்கி ஓய்ந்தன! தங்கமும், அந்தப் பெண்ணை முதன் முதலில் 'செல்ல'மாகத் தான் பார்த்தாள் — பாவித் தாள்! செல்லம் மட்டும் தயங் கித் தயங்கியே' வாத்தியாரம் மாவைப் பயத்துடன் பார்த் துக்கொண்டிருந்தாள்.

அந்த ஆண்டுக்கு முதன் முதலாகத் தங்கம் 'டியூஷன்' சொல்லிக்கொடுக்க ஒத்துக் கொண்டது 'செல்லத்துக்குத் தான்' ஆறிலிருந்து ஏழு! ஒரு மணி நேரமே பாடம்! அவள் வந்துவிட்டுப் போகும் அந்த ஒரு மணி நேரமும், ரகுநாத னுக்கு உற்சாகம் உள்ளத்திற் குள்ளேயே சுழிபோட்டுக் கொண்டிருக்கும்' தவிர, நாள் தவறாமல் அவளுடைய 'தரிச னம்' அலைந்து திரியாமலே இடைத்துவிடுகிறது! கடிகாரம் ஆறுமணி அடிக்கும்! தங்கம் வருவாள் ஏழு அடித்து முடி யும்! எழுந்துவிடுவாள்! அவளு டன்கூடவே ரகுநாதனின் மன மும் எழுந்து போய்விடும்!

பாவம்! அவனும் 'சின்னஞ் சிறிசு தானே'! எல்லோரையும் போல அவனுக்கும் இருக்காதா அந்த ஆசை!

ஒரு நாள் தங்கம் — நாள் தவருமல் — மணிக்கணக்குத் தவருமல் வருபவள் — வரவில்லை. ரகுநாதன் கடிகாரத்தையும், விதியையும மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். செல்லம புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தது தான் மிச்சம்! அவள் - வாத்தியாரம்மா - வரவில்லை! எழு அடித்து, அதற்கு அப்பாலும் கடிகாரத்தின் பெரிய முள் இறங்கிச் சரிய ஆரம்பித்துவிட்டது "உங்க வாத்தியாரமமா பளளிக் கூடத்திற்கு வந்திருந்தாளோ? என்று செல்லத்தை விசாரித்தான்; ரகுநாதன்.

'ஓ! வந்திருந்தாளே!' என்று சாவகாசமாய்ப் பதில் சொன்னாள் செல்லம். ரகுநாதனுடைய கேள்வியின்போக்கை அவளால், — உலகம் தெரியாத சிறுமியால் — புரிந்து கொள்ள முடியுமா என்ன? செல்லத்தின் நினைப்பில், அடுத்த வீட்டுப் பட்டும், எதிர் வீட்டு மீனுவும் தெறித்துவிளையாடிக்கொண்டிருந்தனர்! மேலும் வாத்தியாரம்மா் வர இயலாதபடியால் எதிர்பாராத ஒரு நாள் ஓய்வு அவளுக்குக் கிடைத்துவிட்டதே என்று கும்மாளிப்போட ஆரம்பித்தாள்!

ரகுநாதனின் மனத்தில் பளு குடியேறி அமர்ந்தது! ஏன் அவளை அவள் வீட்டிலே போய்ப் பார்த்துவிட்டு வந்தால்தான் என்ன? விசாரித்த மாதிரியாகவும், பார்த்தமாதிரியாகவும் இருக்குமல்லவா? வாய்த்த சமயத்தை நழுவவிடலாமா?

ரகுநாதன் மெள்ள விட்டை விட்டு வெளியேறினன். தெருவின் முனை திரும்பியதும் விளக்குக் கம்பத்தின் கீழ் நின்று யோசித்தான்!

"சீ! யாராவது பார்த்தால் என்ன நினைத்துக்கொள்ளுவார்கள்? வீணுக அவள பேரில் பழியைப் போட்டுத் தூற்ற ஆரம்பித்தால்?"

அவனுடைய சிந்தனை நிதானம் தவருமல் ஒரு முறை சுழன்று ஓய்ந்தது, தங்கத்தின் சிரித்த முகம அவனுடைய கண்ணெதிரில் 'பளிச்'சிட்ட பிறகு சிந்தனையாவது மண்ணாங்கட்டியாவது! உதறித் தள்ளிவிட்டு நடக்க ஆரம்பித்தான்!

தங்கம் குடியிருக்கும் விட்டிற்குள்ளிருந்து மின்சாரவிளக்கின் வெளிச்சம, திறந்திருக்கும் சாளரத்தின் வழியாக வெளியே பொங்கி வழிந்துகொண்டிருந்தது!

ரகுநாதன் அவள் வீட்டு வாசலில் ஏறிவிட்டான். உள்ளே யாரும நடமாடுவதாகத் தோன்றவில்லை. வாசற்கதவு, அரைகண்போட்டபடி தூங்கும் மனிதனைப் போல மூடியும் மூடாததுமாய் இருந்தது.

'ஒருவேளை ஏதாவது படித்துக்கொண்டோ, எழுதிக் கொண்டோ இருப்பாளோ?' என்றசந்தேகத்தின்பேரிலேயே கையைக்கதவின்மேல் கொடுத்துத் தள்ளி எச்சரிக்கை செய்தான்!

"யாரது?" உள்ளே இருந்து கேள்விக்குரல் மட்டும் வந்து மோதியது!

"நான்தான்" என்றான் ரகுநாதன்!

"நான்தான் என்றால்"? மீண்டும் அதே குரல் எழும்பியது!

"ரகுநாதன்!"

"உள்ளேவாங்களேன்!"

ரகுநாதன் உள்ளே நுழைந்தான்; அங்கே அவன் நினைத்தபடி, தங்கம எழுதிக்கொண்டோ அல்லது படித்துக்கொண்டோ இருக்கவில்லை! அதற்கு மாறுகப் படுக்கையின் மேல் படுத்துக்கொண்டிருந்தாள்! ரகுநாதனைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தாள்! அவனும் எதிரிலுள்ள நாற்காலியின்மேல் போய் அமர்ந்தான்!

"உடம்புக்கு என்ன?"

"ஒன்றுமில்லை........."

"ஒன்றுமில்லாமலா படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?"

"சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவரும்போதே மயக்கமாக இருந்தது, வீட்டிற்கு வந்ததும் நிற்கக்கூட என்னல் முடியவில்லை!"

"பிறகு?"

"படுத்துக்கொண்டுவிட்டேன்!"

ரகுநாதன் சிரித்துவிட்டான்! தங்கத்தின் விசித்திரமான பதிலைக் கேட்டு சிரித்துவிட்டாற் போல அவளுக்குச் காட்டிக் கொண்டானே தவிர, உண்மையில் அவன் 'சொக்கிபே'போய் விட்டான்!

இந்த மாதிரியான மயக்கம் உங்களுக்கு அடிக்கடி வந்து போவது உண்டோ?" இடையில் சிரிப்பால் அறுந்த பேச்சைத் தொடர்ந்து ஆரம்பித்தான் அவன்!

"இல்லை, இது புதிதாக ஏற்பட்டதுதான்!" என்றாள் தங்கம்

"உங்களுக்காகச் செல்லம் வெகுநாழி காத்துக்கொண்டிருந்தாள். கடைவீதிக்குப் போக நான் வீட்டைவிட்டுக் கிளம்பியதும் அப்படியே உங்களையும் பார்த்து வரும்படி சொல்லியனுப்பினாள்."

ரகுநாதன் 'சரடு' விடுகிறானென்று அவளுக்குத் தெரியாமல் இல்லை. இருந்தாலும் அவள் அதை அப்படியே ஆமோதிப்பதாகத் தலையை ஒரு முறை மேலுங்கீழுமாக ஆட்டினாள்!

"சரி! நான் கடைவீதிப் பக்கம்தான் போகிறேன்! உங்களுக்கு ஏதாவது மருந்து மாத்திரை......"

"ஊஹூம்; அதெல்லாம் ஒண்ணுமே வேண்டாம்; எதற்காகப் புது வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளணும்?"

"அதுவும் நல்ல யோசனைதான்! சிரமத்திற்கு மன்னிக்கணும்!"

"பரவாயில்லை!"

"நான் போய் வருகிறேன்"!

"நானும் நாளைய தினம் கண்டிப்பாக வந்துவிடுகிறேன்!"

ரகுநாதன் போய் விட்டான்! தங்கம் முகவாய்க்கட்டையில் கையைத் தாங்கல் கொடுத்தபடி அவன் போனவழியையே பார்த்துக்கொண்டிருந்தாள்!

ரகுநாதனுக்கும் கிட்டத்தட்ட அவள் வயதுதான் இருக்கும்! பீ. ஏ' வகுப்பில் வெற்றிகரமாகப் பின் வாங்கி விட்டு, மீண்டும் அந்த வருடம் எதிர்த் தாக்குதல் நடத்த எண்ணி இருந்தான்! இடை

யில்தான் இவ்வளவு பெரிய புயல் எழும்பிச் சிறிக்கொண்டிருந்தது!

தங்கத்திற்கு அவனைப்பற்றி எல்லாம் தெரியும்! என்றாலும் அவள் அதை அவ்வளவாக லட்சியப்படுத்தவில்லை! அதற்காக இளமையில் ஊறிக்கிடக்கும் 'அந்த ஆசை' தரைமட்டமாகிவிடுமா என்ன?

தங்கம் மறுபடியும் படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டாள்! எட்டு ஆண்டுகளாக விரக்தி வைரம் பாய்ந்திருந்த இடத்தில் இன்பம் இழையிழையாக வெடித்தோடி வேதனையைக் கிளறியது! மயக்கத்திற்குப் பதில் வேறு ஏதோ ஒரு புதுமாதிரியான மயக்கம் கொழுந்துவிட்டுப் பரவியது!

அவளுடைய மனத் திரையில் 'ரகுநாதன்' மின்னினான்' மறைந்தான்; பேசினான்: சிரித்தான்! அமைதி இல்லை! எழுந்துபோய் கதவுக்குத் தாழிட்டுவிட்டுத் திரும்பியும் படுக்கையில் வந்து படுத்துக்கொண்டாள்.

விளக்கு அணைந்தது! விரக்தி வெளியேறிப் போய் விட்டது! வேதனை சுதந்திரத்துடன்விளையாட ஆரம்பித்தது' தங்கம், ரகுநாதனை அவள் உள்ளத்தில் சிறை செய்தாள்.

★

ஒரு ஞாயிற்றுக்கிழமை!

தங்கம், செல்லத்திற்குப் பாடம் சொல்லி முடித்துவிட்டுக் கிளம்பினாள்! ரகுநாதன் ஏதோ ஓர் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு படிப்பபதைப் போலப் பாவனை செய்து கொண்டிருந்தான்! கவனமெல்லாம் என்னவோ தங்கத்தின் மேல்தான் குத்திட்டு நின்றது!

"நான் வரட்டுமா செல்லம்!" என்றாள் தங்கம்.

"சரி டீச்சர்!" அப்பாவிச் சிறுமியான செல்லத்தின் குரலில் குழந்தையுள்ளம் நிழலாடியது!

ரகுநாதன் அந்தக் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான், தங்கம் வாசற்படியைக் கடந்துபோய்க் கொண்டிருந்தவள் தயக்கத்துடன் பார்வையைப் பின்னோக்கிப் பாயவிட்டாள்!

விழிகள், உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் வேதனையை நாசுக்காக வெளியில் எடுத்துக் காட்டின! அந்தக் கண்களில் தான் எத்தகைய கவர்ச்சி!

நடந்தாள்!

ரகுநாதன் வீட்டுக் கடிகாரத்தில் அப்போதுதான் மணி 'டாண்', 'டாணெ'ன்று ஏழு அடித்தது! அவன் இதுமாதிரியான மாறுதலைப் பார்ப்பது இதுதான் முதல் தடவை! சிறிது நேரம் கழித்து ரகுநாதனும் வீட்டைவிட்டுக் கிளம்பினான். வீட்டிலிருபபவர்களுக்குச் சந்தேகம் எழாமலிருக்க வேண்டுமே என்பதற்காக வேறு பாதையில் நடந்து போவதாகப் போக்குக் காட்டினான்! எப்படியோ சுற்றிவளைத்துக்கொண்டு தங்கத்தின் வீட்டிற்கு வந்துசேர்ந்துவிட்டான்! அவள் முன்னமேயே வழிபார்த்துக்கொண்டிருந்தாள்; ரகுநாதன் வருவானென்று நிச்சயமாக உறுதியளித்துவிட்டது அவளுடைய மனச்சான்று.

வந்தான் வரவேற்றாள்! இருவரும் உள்ளேபோய் அமர்ந்தார்கள்!

"உங்களை ஒன்று கேட்க வேண்டும்" என்று பீடிகை போட்டாள் தங்கம்!

"என்னிடமா?" என்று கேட்டான் ரகுநாதன்!

"ஆமாம்! இதை நான் வேறு யாரிடம் போய்க்கேட்கப் போகிறேன்?"

"என்ன அப்படிப்பட்ட 'ஒன்று'?"

"நீங்கள் என்வீட்டிற்கு இன்று வந்ததின் காரணம் என்ன?"

கண்ணைப் பறித்தெடுக்கும் மின்னலைப் போலிருந்தது அந்தக் கேள்வி! ரகுநாதனை நடுங்கினான்! இதயத்தில் இடியோசையுண்டெழுந்தது! நெற்றியில் வியர்வை முத்துக் கோர்த்தது!

"ஏன்பதிலேயே காணோம்?" என்று மீண்டும்ஒருகேள்வியை உதிர்த்தாள் தங்கம!

"ஆ! என்ன கேட்கிறீர்கள்?" என்றான் ரகுநாதன்!

"தெரிய வில்லையா?...... கேள்விதான் கேட்கிறேன!"

தங்கம், பள்ளிக்கூடத்து வகுப்பில் நடந்து கொள்ளும தோரணையில் பேச ஆரமபித்தாள்!

"நான் என்ன பதில்சொல்ல வேண்டும்?"

ரகுநாதன் நிலைமையைச் சமாளிக்கும் சக்தியைக் கொஞ்சம் கொஞ்சமாக எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தான், அவன் தன்னிடம் கெஞ்சவேண்டுமென்று எதிர்பார்த்தாள் தங்கம்! ஆனல் அவனே திசை தவறிபபோகப் பார்த்துக் கொண்டிருந்தான். இடத்தை விட்டும் எழுந்து விட்டான்!

"இருங்கள்! கதவை நான் மூடுகிறேன்" என்று ஓடினாள் தங்கம், ரகுநாதன் மௌனத்தில் மூழ்கினான்! தங்கம் திரும்பி வந்தாள். அனுபவரேகை பாவிய கண்களில் ஆசை குறுமபுச் சிரிப்பாகமலர்ந்தது! உணர்ச்சி உள்ளத்தில் குமிழியிட்டு வெடித்தது! "மிஸ்டர் ரகுநாதன்!" என்றாள் அவனை நோக்கிக் கைகளை விரித்தபடி!



ரகுநாதனுக்கு மனம் அவன் வசம் இல்லை! தத்தளித்தது; தடுமாறியது! இரண்டு மெல்லிய கரங்கள் தன் உடலைச் சுற்றிச்சுருண்டு கொண்டு வருவதை உணர்ந்தான்! கண்கள் கனவுகாண ஆரம்பித்தன!

தங்கத்தைத் தழுவினான்!

"இச் — இச் — இச்"

ஒலி, விட்டு விட்டுத் தொடர்ந்து எதிரொலித்து மடிந்தது! சற்று நேரம் வரையில், இருவருக்கும் மருண்டநிலை! வீட்டில் விளக்கு அணையவில்லை, எரிந்து கொண்டுதான் இருந்தது!

தங்கம் என்ன நினைத்தாளோ என்னவோ? அவன் தழுவலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்! ரகுநாதனுக்கு அதைக்கண்டதும் பலமான அதிர்ச்சி ஏற்பட்டது! துள்ளினான்; துடித்தான்!

தங்கம், இணங்க வில்லை!

சற்று முன் அவன் நினைத்த தங்கம் வேறு; இப்பொழுது அவன் பார்க்கும் தங்கம் வேறு மீண்டும் வைராக்கியமும், தசை ஆசையில் அலட்சியமும் குடிகொண்ட மனத்தைத்தான் பார்த்தான் ரகுநாதன்! இனி அவள் நெருப்பு! அவளிடம் நெருங்க முடியாது; ரகுநாதன் ஒடிந்த மனத்துடன் அங்கிருந்து புறப்பட்டான்.

தங்கம் மௌனமாக அழுதாள்! "சீ! இதுதானா மனித வாழ்க்கை?" குமுறிக்கொந்தளிக்கும் உள்ளம் ஒரு ஒளிக் கோட்டைக் கிழித்துக் கலைத்தது!

மீண்டும்; தூக்கம்—பள்ளிக்கூடம்—வகுப்பு அறை-உணவு—டியூஷன்—ஓய்வு!

காலம் ஓடிக்கொண்டே இருந்தது!

ஒரு ஆண்டு சுழன்று ஓடிந்து வீழ்ந்தது!

பரீட்சையில் 'செல்லம்' தேறிவிட்டாள். பழையவகுப்பை விட்டு வேறு அடுத்த மேல் வகுப்புக்கு மாறிப்போய் உட்கார்ந்து விட்டாள்!

ரகுநாதன் பீ. ஏ. வகுப்பில் முதன் முதலாகக் கொடி போட்டுக் கொண்டு வெற்றி மாலை சூடினான்!

அடுத்தாற் போலத் திருமண அழைப்பு அதில் தங்கத்திற்கும் ஒன்று வந்தது. ரகுநாதன் கையாலேயே முகவரியை எழுதி இருந்தான்!

அவள் பிரித்துப்படித்தாள்! பழைய சம்பவங்களெல்லாம் கலைந்துபோன காலைக்கனவாகவே தோற்றியது!

மறுபடியும் வகுப்பிற்குள் நுழைந்தாள்! அதே வெள்ளைப் புடவையும், வெண்ணிற ஜாக்கெட்'டும் தங்கத்தின் உடலில் குடிகொண்டிருந்தன! தான் தூய்மையானவளென் பதை எடுத்துக் காட்டுவதற்காக! நடையில் கூட மாறுதல் இல்லை! பழைய மிடுக்கு நடைதான்!

அவளைப்பார்த்ததும் 'வாத்தியாரம்மா' "வாத்தியாரம்மா" என்ற குரல்கள் மந்தமாகக் கசமுசவென்று கிளம்பி மறைந்தன. ○



பாரதிதாசன் பரம்பரை

[புகழ் பெற்றுள்ள சக்தி நாடகசபையின் உரிமையாளர் திரு டி. கே. கிருஷ்ணசாமி அவர்கள் "தமிழ்ப் பணி" என்ற இப்பாடலை இயற்றியுள்ளார்கள். "இளமதி" அவர்தம் புனைபெயர்—ஆசிரியர்]

தமிழ்ப் பணி

சித்திரத்தில் அமைத்திடவோர் கவிஞனில்லை,!
செம்பொற் சிலம்பதனை அணிவிக்க
இத்தினத்தில் இளங்கோவன் என்றஓர்
அரசனில்லை, இலக்கிய நீர்க் கடலினிலே
முத்தெடுத்து மேகலையிற் கோத்திடவோர்
புலவனில்லை, முக்கனியில் தமிழ்த் தேனின்
சத்தமைத்து மறைசெய்ய வள்ளுவனும்
ஈங்கில்லை என்செய்வோம் தமிழ்த்தாயே!

உன்னிலைக்கே இரங்குகிறோம்! உன்னுடலின்
அணிகளெலாம் ஒளியிழக்க உன் மக்கள்
தன்னிலையை உணருகின்ற தகைமைதனை
நீயறிந்து தண்கருணை நீர்பாய்ச்சி,
முன்னிலையை எம்முள்ளே செழித்திடவே
செய்துவிட்டால் முடிசூடி உன்னழகைச்
சென்னிமுதல் அலங்கரித்துச் சிலம்புவரை
உலகமெலாம் கண்கொள்ளச் செய்யோமோ?

பாலைவனம், கற்பாறை, வரட்டுநெஞ்சப்
பாவிகளைப் பண்படுத்தித் தீந்தமிழின்
சோலைவனம் ஆக்குகின்ற செயலினிலே
ஊரிழந்து சோறிழந்து உயிர்நீங்கும்
காலையிலும் எம்மருமைத் தமிழ்த்தாயின்
பெருமைதனைக் கூவிஎழிற் காதலியின்
மாலைமலர் முகங்கண்ட மகிழ்ச்சியுடன்
மாய்ந்திடவும் கொஞ்சமும் நாம் அஞ்சோமே!

சிரிப்பிலும் கோடிக்கணக்கான அர்த்தங்கள் புதைந்து கிடக்கும்.

இந்தத் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்று புரியவில்லையா? ஆமாம், அது சொ. மு.வுக்குஎன்று அமைந்த அற்புதமான முறை. பிறருக்கு வருவது மிகமிகக் கடினந்தான்! வேண்டுமானால் ஒரு சில எடுத்துக்காட்டுகள தருவோம். 'காப்பி'யடிக்க முடியுமானால் முயற்சியுங்கள்!

•

50414, 61532,

144, 651,

இவைகள் சாதாரண எண்களல்ல, மகிமை மகத்துவ எண்கள்! இந்த எண்கள் அச்சில் வருமா என்று ஏங்கிய உள்ளங்கள், பரபரவெனப் பாய்ந்தோடும்கண்கள்...... 'திக்,திக்' கென்று அடித்துக்கொள்ளும் இதயத் துடிப்பை, அந்த எண்களைத் தாங்கிவரும் ஏடுகளைப் பிடிக்கும் கரங்களில் ஏற்படும் நடுக்கத்தை யாரே அறிவார், பராபரமே! மாணவர் சமுதாயத்தின்மீது பாயக் காத்திருக்கும் வெடி குண்டுகள், மிரட்டிடும் ஆசிரியர் கையிலிருக்கும் சுழல் துப்பாக்கியின் வேட்டுச் சத்தங்கள் தாம் அந்த எண்கள்! ஆனால்......... இங்கே குறிப்பிடப்பட்ட எண்கள் நமது தத்துவஞானி சொ. மு. வின் குறிப்புப் புத்தகத்திலிருந்து எடுக்கப் பெற்றன!

•

ஒவ்வொரு எண்ணுக்குள்ளும் ஒரு சரித்திரம் மறைந்திருக்கிறது...... அதனை அம்பலப்படுத்தினால்தான் மார்க்சிசத்தின் நடைமுறைத் திட்டம் விளங்கும்!

50414...... ஆங்கிலத்தில் இழுப்பாம்! இந்தக் கொடுமையை நமது சொ. மு. அவர்களிடம் பையன் பின்தொடர, தந்தையார் உடன்வர ஒரு தூது கோஷ்டி வந்து பேட்டி கண்டது (காணிக்கை செலுத்தித்தான்!) அந்த எண்ணைக் குறித்துக்கொண்டார். மதிப்பெண்களை வைத்து மிரட்டும் பூர்ஷ்வாவிடம் படையெடுத்தார்.

"ஐயா, வணக்கம் கோடி, கோடி"

"வாரும், வந்த காரியம்?"

"இந்நேரம் தெரிந்திருக்குமே!"

"எந்த எண்?"

"50414"

"அது சரி, மற்றவை......"

"வழக்கம்போல்......"

சொ. மு. அவர்களின் பர்சின் கனம் குறைந்தது. அவரது மனக் குறையும் மறைந்தது. சொ. மு. வெற்றி பெற்றார். மார்க்சிசம் பிறந்தது!

61532...... சரித்திரத்தில் கொஞ்சம் 'மக்கர்'! மாணவனே வந்து மண்டியிட்டான். 'மணிபர்சு' மட்டும் மறக்காமல்

கொண்டுவந்து விட்டான்! ஒப்பினர் தப்பற உணர்ந்த தத்துவப் பேராசிரியர்! எனினும் இதில் கொஞ்சம் சிக்கல்! ஏடு திருத்தும் 'மிரட்டுபவர்' தயவு தாட்சண்யமில்லாதவர். பணம் கண்டு பல்லிளிக்காத படு மோசக்காரர். வேண்டியவர், வேண்டாதவர் என்று பார்க்காத அநியாயக்காரர்! இருந்தாலும் சொ. மு.விடம் பலிக்குமா? ஏற்றநேரம் பார்த்து 'நேரடித் தாக்குதல்' நடத்தினர்! தானே போவாரா? 'சாட்சாத்' அவரது மாமனாரையே தூதாக்கினர். மாமனார் மகளிடம் சொல்ல, மகளோ தனது கணவரிடம் கொஞ்சுமொழியுடன் கூற சொ. மு. ஒரு செப்புக் காசும் செலவில்லாமல் இட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

144......... கணக்கில் மிகக் கணக்காக எண்ணிப் பதினேழு வந்திருந்தது! இது சொந்தத்து வியாபாரம். தம்மிக்கு வந்த 'தலைபோகிற ஆபத்து'! திருத்தும் ஆளோ ஆங்கிலேயர்! காரியம் எளிதில் முடியுமா என்று கலங்கினர்! ஆனாலும் 'வீட்டி'க்குப் புறப்பட்டார். அந்தப் 'பூர்ஷுவா'வை சந்திக்கச் சமயம் பார்த்தார் அந்த 'மார்க் முதலாளி' தனது இதய ராணியுடன் வினஸ் விளையாட்டின் முதல் படியான நாட்டியம் ஆடிக்கொண்டிருந்த 'நல்லவேளை' பார்த்து நுழைந்தார். அவர்கள் சிரிப்பிடையே இந்தச் சிறு உதவி பெரிதாகத் தோன்றவில்லை. 'ஒகே' என்றார். சொ. மு. வின் சோர்ந்த முகம் தெளிவடைந்தது.

651......... எல்லாவற்றிலும் 'முரட்டு' மார்க்குகள்! பணம் மட்டும் ஏராளம் புரண்டது. சொ. மு. வுக்குப் பிரயாணத் தொல்லைகள் எவ்வளவு! அப்பப்பா, சொல்லி முடியாது! எட்டுத் தாள்களையும் எவர் கவர்ந்து சென்றுள்ளனர் என்று காணவேண்டுமென்றால் முடியுமா? சீதையை எவர்கொண்டு சென்றனர் என்று அறியவே திருமாலின் திரு அவதாரமான இராமபிரானுக்கு முடியவில்லை. அவரே காட்டையும் மேட்டையும், மானையும் மயிலையும்......... பார்த்துப் புலம்பினர். பிறகு இருக்குமிடந்தெரிந்ததும் சீதாதேவியினை மீட்டுக் கொணர மகா யுத்தம் நடந்ததாமே! சொ. மு. சாதாரண மனிதர் தானே, என்ன செய்வார், பாவம், பரிதாபம்.........அவர் வாழ்விலேயே பெருந்தோல்வி ஆம், மார்க்கிசக் கொள்கையின் ஒரு சிறு வீழ்ச்சி இதில் தான் ஏற்பட்டது!

ஆம், கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் நடந்து வரும் வர்க்கப் போராட்டம், இந்த மார்க்குப் போராட்டந்தான்! ஆசிரியர், மாணவரிடையே வளர்ந்துவரும் பகையுணர்ச்சியொழியப் பிறந்ததே மார்க்கிசத் தத்துவம்! பரீட்சைக் கொடுமையைப் படுசூரணமாக்கவந்த பக்குவமான, பரிசுத்தமான திட்டம்!

மார்க்கிசக் கொள்கையை நாட்டிய மாவீரர் சொ. மு. வாழ்கவென ஆசிரியரும், மாணவர்களும் முழங்குவார்களாக! மார்க்கிசம் வாழ்க! ○



பாரதிதாசன் பரம்பரை

[தோழர் பெ. நாகப்பன் அரிமழத்தைச் சேர்ந்தவர். பாரதிதாசன் பரம்பரையில் ஒருவராக வேண்டுமென்பதில் 'அவருக்குப் பெரும் ஆர்வம் உண்டு. தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களைப் பற்றி அவர் எழுதிய பாடல் இது; அவர்தம் ஆர்வத்தின் விளைவு.! —ஆசிரியர்]

திரு. வி. க.

கண் டொத்த இலக்கியங்கள்
    கனிதமிழில் தந்துள்ளார்;
பண்பட்ட உளமுடையார்!
    பார்ப்பதற்கு மிகஎளியார்!

கருதியதைச் செயலாக்கிக்
    காட்டிடவே என்றென்றும்
உருவாக்கும் உளமுடையார்
    உறுதி சொல்லி எதனையுமே!

உண்ணும் உணவிலினும்
    உயர்நூல்கள் தந்தவரை
எண்ணும் பொழுதெல்லாம்,
    இதயமெலாம் மகிழுதடா!

தேன் மணக்கும் வாயெல்லாம்
    திரு. வி. க. என்றுசொன்னால்!
'நான் சுவைப்பேன் அவர்நூல்கள்'
    என நவிலும் நாவெல்லாம்!

தொண்டுசெய்து வாழ்வாரின்
    தொகைஅதிகம் என்றாலும்
உண்மையிலே தொண்டியற்றும்
    உயர் பெரியார் திரு. வி. க.!

ஆணும் பெண்ணும்

-ரா. தணலன்-

இத் தலைப்பில் கட்டுரைகள் தொடர்ந்துவரும்; நண்பர் தணலன் இந்த உலக வாழ்க்கை சிறக்க வழிகாட்டுவார் இக் கட்டுரைகளில். ஆணும் பெண்ணும் படித்துப் பயனடைய வேண்டுமெனச் சிபாரிசு செய்கிறோம்.

1. அந்தக் காலத்திலே ....

முதலிலேயே சொல்லி விடுகிறேன், இது ஆணுக்குப் பெண்ணிடத்திலும் பெண்ணுக்கு ஆணிடத்திலும் உண்டாகும் மயக்கத்தைப் பற்றிய கட்டுரை அல்ல. சரித்திர காலத்திலே, உலகவாழ்க்கையிலே ஒன்றை இன்றி ஒன்று இருக்க முடியாத இந்த இரண்டு அம்சங்கள், ஒன்றுடன் ஒன்றுபோராடி, ஒன்றையொன்று அடிமைப்படுத்துவதில் வெற்றி பெற்று. இன்றைய சமுதாயத்தைய ஆண் பெண்ணின் நிலையை எப்படிக் கொண்டு வந்தன என்று ஆராய்வதற்கே இந்தக் கட்டுரை.

உயிருள்ளவற்றிலும் உயிரில்லாதவற்றிலும் ஒரு கவர்ச்சிகரமான அம்சம் இயற்கையிலேயே காணப்படுகிறது. அது ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு உயிரிலும் காணப்படுகிறது. இரண்டு பொருள்கள் ஒன்றினிடம் சில தன்மைகளும் மற்றொன்றினிடம் வேறு சில தன்மைகளும் உடையனவாய் இருந்து ஒன்றையொன்று ஒரு வல்லமையுடன் கவர்ந்து புதிய ஒன்றைச் செய்யும் வல்லமை பெற்றவைகளாய் இருக்கின்றன. யோசித்துப்பார்க்கும் பொழுது இந்தக் கலவியிலே தான் உலகம் முழுவதும் ஆக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. எல்லாப் பொருள்களும் ஒன்றையொன்று சேர்வதற்காகவும் புதிய ஒன்றைச் செய்வதற்காகவுமே ஆக்கப்பட்டிருக்கின்றன என்றும் தோன்றுகிறது. உலகப் பொருள்கள் யாவும் மூலத்தில் ஒன்றையொன்று சேரவேண்டிய இருதன்மைகளாகப் பிரிந்து கிடக்கின்றன, சேர்கின்றன. மலர்கின்றன என்றும் தோன்றுகிறது.

ஆண்மை, பெண்மை என்கின்ற இந்த இரண்டுதன்மைகளும் ஒன்றை இன்றி ஒன்று இருக்க முடியாது. ஒன்று இல்லையேல் இன்னொன்றும் இல்லைதான். இந்த இரண்டும் இல்லையானால் உலகமே இல்லை. எல்லாவற்றிற்கும் அடிப்படையும், எல்லாவற்றின் வளர்ச்சியும் எல்லாம் எல்லாமுமே இவை இரண்டில் பொதிந்து கிடக்கின்றன.

மனித இனத்தில் தவிர வேறு எந்த இனத்திலும்

பெண் அடிமைத்தனம் இல்லை. அடிமைத்தனம் என்பதே மற்ற இனங்களில் இல்லை. சமூகத்தின் ஒரு பகுதியை மறு பகுதிக்கு அடிமையாக்கிய இந்தச் சதி எப்படி முளைத்தது என்பது ஒரு ரசமானகதை யாகும்.

கடவுள் ஆதமைப் படைத்தான் அவன்தொடையிலிருந்து ஏவாளைப் படைத்தான். அல்லது ஒரு பரந்த வெளியிலிருந்து பிரம்மம் தோன்றியது. அது உலகனைத்தும் நான் நானே என்றது. அந்த ஓங்காரத்திலிருந்து சைவர்களுக்குச் சிவனும் வைணவர்களுக்கு விஷ்ணுவும் முதற் கடவுளாய்த் தோன்றினர்கள். பின் சக்தி அல்லது லட்சுமியும் தோன்றினள். உலகம் அவர்களால் சிருஷ்டிக்கப் பட்டது. இந்தக் கதைகள் நமக்குவேண்டாம். இவை உண்மை அல்ல.! பொய்யைப் போற்றி வந்ததால்தான் புனிதமான மனித குலம் இன்று நரகவாசலிலே நிற்கிறது. அறிவைக் குருடாக்காமல் மனதைத்திறந்து யாருக்கும் யாவர்க்கும் இனிதான உண்மையை நாம்காண்போம். அறிஞர்கள் அதற்கான வழியை நமக்குக் காட்டிஇருக்கின்றனர்.

இன்று, நமது நாட்டில் பெண் ஆணுக்கு அடிமையாயிருக்கிறள். 'அடிமை என்ற சொல்லின் உண்மையானலட்சணத்தை — இலக்கணத்தைப் பார்க்க வேண்டுமானல் இந்திய நாட்டுப் பெண் ஒருத்தியைப் பார்' என்று ஏதோ ஒரு அறிஞர் சொல்லியதாக ஞாபகம். அவ்வளவு கேவலமானதாக இருந்தது, இருக்கிறது, இந்திய நாட்டுப் பெண்களின் நிலை. அழகு, அன்பு, கருணை, மென்மை ஆகிய பண்புகளுக்கு உருவமாய், இன்பத்தின் இருப்பிடம் என்று வர்ணிக்கப்படுகிற பெண்ணின் நிலைமைதான் இந்த நாட்டில் இத்தகையதாக இருக்கிறது. இன்று பெண்கள் சற்று விழிப்படைந்து வருகிறுர்கள் எனக் கூறலாம்.

பெண்ணுக்குப் பேச்சுரிமை கிடையாது. எழுத்துரிமை கிடையாது. நினைக்க உரிமை கிடையாது தன் எண்ணப்படி நடக்க உரிமை கிடையாது. விலைக்குக் கொடுக்கப்பட்டு, விலையால் வாங்கப்பட்டு, உழைப்பதற்கும், பணிவிடை செய்வதற்கும், இன்பம் கொடுப்பதற்கும், குழந்தைகளைப் பெறுவதற்குமாகக் கசக்கிப் பிழியப்படுகிற ஒரு மனிதப்பிராணி அது. அதன் தலைவிதி ஆணினத்தால், அதனுடைய சுயநலப்பேய் ஆட்டங்களுக்குச் சாதகமானதாக எவ்வளவு கேவலமான, கொடூரமான, முறையில் வேண்டுமானலும் நிர்ணயிக்கப்படலாம். எங்கள் ஊரில் இந்த இருபதாம் நூற்ருண்டில், 1948-ம் வருடத்தில் அறுபது வயதான ஒருமனிதர், ஆயிரம் ரூபாய் கொடுத்து விலைக்கு ஒரு மனைவி– 16-வயதுப் பெண் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறர் என்ருல், காலத்தால் பெண்ணினம் எவ்வளவு கொடூரமாக நடத்தப்பட்டு வந்திருக்கும் என்பது கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாதது.

இவ்வளவு கேவலமான முறையில் நடத்தப்பட்டு வரு

இற இந்தப் பெண்ணினமே ஒரு காலத்தில் ஆண்களுக்கும் தலைமை வகித்தது. உலகத்தில் முதன்முதல் சமுதாய வாழ்வை உண்டாக்கியது. மக்கள் கூட்டங்களை அரசாண்டது என்று கூறினால் நம்பத் தோன்றுகிறதா?

உலகம் தோன்றிய அந்தக் காலத்தில், மண்ணுலகம் வெறும் மண் உலகமாய் இருந்தது போய் உயிர்களும் தாவரங்களும் உடைய உலகம் ஆகிய அந்தக் காலத்தில், அநாகரிகமான காட்டுமிராண்டிகளாய், கிடைத்ததை உண்டு, மரப் பொந்துகளிலும் குகைகளிலும் நமது மூதாதைகள் வசித்து வந்த காலத்தில் தனி மனிதர்களாய் ஆண் ஒரு பக்கமும், பெண் ஒரு பக்கமும் ஆக, கரடிகள் புலிகள்போல் பந்தமும பாசமும் இல்லாமல் திரிந்த காலத்திலிருந்து உலகம் குடும்பமாய், சமூகமாய், இனமாய், நாடாய் இன்றைய வளர்ச்சியை அடைவதற்குத் தொடகக்ம் செய்தது பெண்ணினம என று சொன்னால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஏதோ கதையைப்போல் தோன்றும். ஆனால் உண்மை இது. நெடுங்கால ஆராய்ச்சி தந்த நல்லறிவு இது. சரித்திரம் இது. சான்றுகளும் தரலாம்.

எத்தனையோ இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் எரிதழல் பிழம்பாய்ச் சூரியனிலிருந்து தெரித்து விழுந்த ஒரு துளியான இந்தப் பூமி. இலட்சம் இலட்சம ஆண்டுகளாய் அடைந்த மாற்றத்தில் மரமும் செடியும், மனிதனும் மிருகமும் உடையதாய் எப்படி மாறியது என்பதை விஞ்ஞானம் விரித்துரைக்கிறது.

ஆரம்ப மனித இனம் ஆண் வேறு பெண் வேறாய் உடற் புணர்வு என்கிற ஒரு உறவே அல்லாமல் வேறு எவ்வித உறவும் இல்லாமல் திரிந்து கொண்டிருந்தது.

இதன் பிறகு மனித இனம் அடைந்த வளர்ச்சியைப்பற்றி உலகப் பேரறிஞர் மார்க்ஸின் கம்யூனிஸ்ட் (மானிபெஸ்டோ) அறிக்கைக்கு எழுதிய உரையில் ரியாஜனால் என்பவர் கீழ்க் கண்டவாறு வர்ணிக்கிறார்.

'இந்த உலகத்தில் மனித வர்க்கம் தோன்றிப் பல ஆயிரக் கணக்கான வருடங்களுக்குப் பிறகே மனிதன் பேசவும் கைகளால் சில வேலைகளைச் செய்யவும் நீண்ட காலம் பழக்கத்தினால் கற்றுக்கொண்டான் அந்தக் காலத்தில் சிறு சிறு கூட்டங்களாக மனிதர்கள் வசித்தார்கள்'

அந்தக் காலத்திய மனிதக் கூட்டம் ஒவ்வொன்றும் தாய் என்பவளைச்சுற்றி அமைந்திருந்தது. குழந்தைகசளைப் பெற்ற தாய்தான் உணவு தேடவும் குழந்தைகளைக் காப்பாற்றவும் முயற்சித்தாள். அவள் முன் செல்ல, அவளுடைய மகன், மகள், சகோதரன் முதலியவர்கள் பின் தொடர்ந்து சென்று காய்கனிகளைச் சேகரிப்பர், வேட்டையாடுவர். கிடைக்கிற உணவைத் தாயே எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பாள்.

'அந்த மனிதக் கூட்டங்களுக்கு அதன தன் மூத்ததாய் தலைவி. அவள் பேச்சுக்கு மறு பேச்சில்லை. அவள் செத்தால் அவளுடைய மூத்த மகள் தலைவி ஆவாள். மற்ற மகள்கள் அந்தக் கூட்டத்திலேயே இருக்க விரும்பாவிட்டால் தனியாக வேறு கூட்டம் அமைத்

பூணூல் துணை.

திருடர்கள் எப்பொழுதும் தங்களுடைய அறிவைத் தீட்டி வைத்துக் கொண்டிருக்க வேண்டும். எந்தச்சமயத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாதல்லவா? சமயோசிதம் போல நடக்க வேண்டும்- சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி தங்களிடம் உள்ள கருவிகளைக் கொண்டே காரியத்தைச் சாதிக்க வேண்டும். மிருச்ச கடிகத்தில் வருகிற 'சர்விலகா' என்பவன் திருடச் செல்லுகிருன். கன்னம் போடத் தொடங்குகிருன். துவாரத்தின் அளவை அளக்க அளவுக் கயிறு கொண்டுபோக மறந்து விட்டான். என்ன செய்தான் தெரியுமா? தன்னுடைய பூணூலை எடுத்துத் துவாரத்தை அளக்க உபயோகப் படுத்திக் கொண்டான். அந்தப் பூணூலைக் கொண்டு இரும்புப் பெட்டிகளையும் கூடத்திறக்கலாமாம்!

* * *

அர்த்தராத்திரிகளில் 'பூச்சி பொட்டு' என்று பாராமல் காட்டு வெளிகளில் சுற்றுகிற திருடர்கள் விஷக்கடி மருந்து வைத்துக்கொள்ள வேண்டும். விரல்களில் தீண்டிவிட்டால் உடனே பூணூலை எடுத்துக் கொட்டுவாய்க்கு மேலே இறுகக்கட்டிவிட வேண்டும். அப்படிச் செய்வதால் விஷம் ரத்த ஓட்டத்துடன் கலக்காமல் இருக்கும்!

—யு. வெங்கடகிருஷ்ண ராவ்

சக்தி

துவிடுவார்கள். யாரைக் கேட்டாலும் அவர்கள் தங்களைத் தங்களுடைய முதல் தாயின் பெயரைச்சொல்லி அவள் வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வார்கள்.

இதற்கு வேறு விளக்கமே அவசியம் இல்லை. தன் உயிரைக் காப்பதே தனக்குப் பெரிதென்கிற நிலைமையில் தனித் தனி மனிதர்களாய் மனித இனம் வசித்துவந்த அந்தக் காலத்தில் அன்பு பாசம் என்கின்ற உணர்ச்சிகள் முதன் முதல் ஒரு தாயின் மனத்தில் தான் தோன்றியிருக்கவேண்டும். அவள் தன் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டி இருந்தது. தன் குழந்தைகளுக்காக உணவுதேடவேண்டி இருந்தது. தன் குழந்தைகளுக்காகப் போராடவேண்டி இருந்தது. தன்னலமற்ற உணர்ச்சிகளை இந்த உலகத்தில் முதன் முதல் உண்டாக்கிய இனமே பெண்ணினம்தான் என்று துணிவுடன் கூறலாம்.

இந்த நிலையில் உள்ள ஒரு தாயின் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப் பார்ப்போம். ஒரு பெண். அவள் பருவம் அடைந்தாள். கட்டுக்களும் திட்டங்களும் இல்லாத அந்தக் காலத்தில் அவளுக்குப் பருவ உணர்ச்சிகள் தோன்றியபொழுது, தன் அருகாமையிலிருந்த ஆணைக் கூடியிருப்பாள். எந்த விதமான சமூக உறவும் இல்லாத அந்தக் காலத்திலே, எந்தவித பந்தமும் பாசமும் பற்றும் இல்லாத அந்தக் காலத்திலே அந்தப் பெண் தன் உடல் உணர்ச்சிகளைத் தணித்துக் கொள்ளத்தேடிய ஆண் துணை

தனக்கு என்ன உறவினன், என்று ஏதும் எண்ணிப் பார்த்திருக்கமாட்டான். அவன் அவளுக்குத் தகப்பனாகவோ, சகோதரனாகவோகூட இருந்திருக்கக்கூடும், சில பெண்கள் தங்கள் மக்களுடன் கூடக் கூடி இருக்கலாம். அந்தக் காலத்திய அந்த மனிதனுக்கு இந்த உறவு வேறுபாடு முறை ஒன்றும்தான் கிடையாதே!

அந்தப் பெண்ணிற்குக் குழந்தைகள் பிறக்கின்றன. அந்தக் குழந்தைகளை அவள் பாதுகாக்கிறாள். வரிசையாக அவற்றை உணவு தேட அழைத்துச் செல்கிறாள். கிடைத்த உணவை எல்லோருக்கும் பங்கிட்டுக் கொடுக்கிறாள். பகைகள் எதிர்த்த போது போராடக் கற்றுக் கொடுக்கிறாள். இயற்கையாக அந்தக் குழந்தைகளுக்குத் தாயினிடத்தில் அபரிதமான அன்பும் பாசமும் உண்டாகிறது.

இப்பொழுது அந்தப் பெண்ணின் குழந்தைகள் எல்லோரும் பெரியவர்களாகின்றனர். அவளுடைய மக்களே ஆகிய ஆண்களும் பெண்களும் பருவ உணர்ச்சிகளுக்கும் ஆளாகின்றனர். அல்லது கூட்டங்களிலிருந்து இந்தப் பெண்களுக்காகச் சில ஆண்கள் இந்தக் கூட்டங்களிலே வந்து கலந்து கொண்டிருக்கவும் கூடும். அவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கின்றன, ஆனால் அந்தத் தாயின்மேல் உள்ள அதிகமான அன்பினாலும், தனித்து வாழ முடியாத நிர்ப்பந்தங்கள் மனித இனத்திற்கு இருந்தாலும் அந்தத் தாயின் மக்களும் பேரர்களும் எல்லோரும் அந்தக் கூட்டத்திலேயே இருந்திருப்பர்.

இவ்வாறு கூட்டம் வளர்ச்சி அடைகிறது. இந்தக் கூட்டத்தின் அமைப்பு எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்ப்போம். ஒரு மூத்த தாய்க்கு ஏழெட்டுக் குழந்தைகள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பல குழந்தைகள், ஆண்கள் பெண்கள். இந்தக் கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் மூத்த தாய்க்குக் கடமைப் பட்டுள்ளனர். ஒவ்வொருவரும் அவளிடம் மட்டில்லாத அன்பும் மரியாதையும் பூண்டொழுகுகின்றனர். அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த அனைவரின் தலைவிதியும் அவளால் நிர்ணயிக்கப்படுகிறது. அன்பின் வாயிலாக அந்தக்கூட்டத்தின் ஒழுங்கு திட்டப்படுகிறது.

இந்த ஆரம்பக் காலத்தில் பெண் இனம்தான் எல்லாப் பெருமைகளுக்கும் பொருந்திய தாக இருந்திருக்கும். இந்தக் காலத்தில் சாதாரணமாகப் பெண்களைக் குறைத்துப்பேசும் வழக்கம் இருக்கிறது. ஒரு பெண் குழந்தை நாலுபேர் எதிரில் உரக்கப் பேசிவிட்டால், கள்ளமில்லாது விளையாடிவிட்டால் 'என்ன இருந்தாலும் பெண் அல்லவா? என்று பெற்றவர்களே முணு முணுப்பதை நாம் காண்கிறோம். இதற்கு நேர்மாறாக...பெண்கள் அடக்கி வைக்கப்பட்டிருப்பதற்கு மாறாக ஆணினம் மரியாதை பெற்றிருப்பதற்கு மாறாகப் பெண்ணினம் மதிக்கப்பட்டு, ஆணினம் குறைவாக எண்ணப்பட்டும் கூட இருந்திருக்கலாம் அந்தக்காலத்திலே. ○

வானதிர முரசார்ப்பீர்!

கன்னல்நிகர் தமிழ்நீக்கி அமைச்சருமே
கட்டாய மெனச்சொல்லி இந்தி தன்னை
இன்னல்தரும் வகையினிலே கொண்டுவந்திங்(கு)
இறக்குமதி செய்கின்றார். அவருக் குத்தான்
முன்பொருநாள் ஆரியரைப் போர்முனையில்
முறியடித்தே அவர்தலைமேல் கல்சு மத்திக்
கண்ணகிக்குச் சிலைசெய்யக் கொண்டுவந்த
காவலனாம் சேரன்கதை மறந்து போச்சோ?

ஆண்டுபல நூறுகளாய்த் தமிழ்மொழிதான்
ஆரியத்தின் சூழ்ச்சியினால் அல்லல் உற்றே
ஈண்டுவந்த துருக்கர்களின் ஆட்சியிலே
இயங்குமுறை வகைசிலவே மாறி, முன்னீர்
தாண்டிவந்திங்(கு) அரசாண்ட ஆங்கிலத்தால்
தனிப்பெருமை முழுதிழந்த பின்னு மிங்கே
மீண்டுமிந்திச் சிறுக்கியினை வரவேற்கும்
வீணர்களும் மலிந்தனரே தமிழர் நாட்டில்!

ஊன்வளர்த்த தெதற்காக? மானமிலால்
உயிர்பெரிதாய் எண்ணுவரோ திராவி டத்தார்?
தேன்நிகர்த்த மொழிகாக்கும் உறுதியுடன்
திரண்டெழுவீர் தமிழர்காள்! இந்த நாளில்
ஆணினமும் பெண்ணினமும் அணியணியாய்
அறப்போர்க்கு வந்திடுவீர்! ஆர்வத் தோடே
வானதிர முரசார்ப்பீர்! இடிக்குரலில்
'வாழ்கதமிழ்' எனமுழக்கம் எழுப்பு வீரே!

சி. அ. சினிவாசன்

போராட்டச் செய்தி நாட்குறிப்பு.

48 செப்டம்பர் 11 21-வது நாள் மறியல். ஐந்து மறியல் தொண்டர்கள் கைது, நேற்றுக்கைது செய்யப்பட்ட 11பேருக்கு சிறைவாசம். சேலத்தில் இந்தி மந்திரி அவினாசிலிங்கத்திற்குக் கருப்புக் கொடிச் சாமரம் வீசி வரவேற்பு. போலீஸ் தடியடி. 100-பேர் கைது. செங்கற்பட்டில் ஓமாந்தூராருக்குக் கருப்புக் கொடி. இந்தி எதிர்ப்பாளர்களின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் முதலமைச்சர் பாராட்டினார்.

12 நேற்றுக் கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் ஒருவாரம் சிறைத் தண்டனை. மதுரையில் மாதவ மேனன், பக்தவத்சலம் வரவேற்பைச் கருப்புக் கொடிகள் நடத்தின. ஆறு தோழர்கள் கைது. திருப்பூரில் கள்ளிரவில் வந்த அவினாசியாருக்குக் கருப்புக் கொடி.

13 22-வது நாள் மறியல். நால்வர் கைது. பெரியாரின் மறியல் நிறுத்த அறிக்கை. இந்திய-ஐதராபாத்போர் துவக்கம். வந்தவாசி சப் மாஜிஸ்ட்ரேட் இரணியன் நாடகமாடினேருக்கு 3-மாதம் 3-வாரக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

14 பெரியார் அறிக்கைப்படி. இன்று முதல் மறியல் நிறுத்தம். நேற்றய மறியல் தொண்டர் நால்வருக்கு 2 வாரத் தண்டனை.

15 திராவிட மெங்கும் அமைதியான அடையாள மறியல். சைதாப்பேட்டை, மயிலாப்பூர், முசிரி, கிருஷ்ணகிரி, பவானி, திருவண்ணமலை, மதுரை தூத்துக்குடி, சடையநல்லூர், திருக்கோவிலூர், போளூர் ஆகிய இடங்களில் போலீசார் தொண்டர்களை யடித்துத் துன்புறுத்திக் கைது சைய்தனர்.

16 திருச்சியில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம். மறியலைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கத் தீர்மானித்தது.

17 இந்தி மந்திரி அவினாசியாருக்கு இலங்கையில் கருப்புக் கொடி வரவேற்பு. விமானநிலையத்தின் கொல்லைவழியே காரில் விரைந்தார் அமைச்சர். தமிழக மெங்கும் பெரியார் பிறந்த நாள் விழா!

19 வந்தவாசியில் மந்திரி சந்திரமௌளிக்குக் கருப்புக் கொடி வரவேற்பு. மூவர் கைது. திருவாரூர் திராவிடக் கழகத் தோழர் சிங்கம் வீட்டை, இந்தி ஆதரிப்புக் கூட்டம் நடத்திய காங்கிரஸ்காலிகள் 300 பேர் வளைத்துக் கொண்டு கல்லெறிந்து ஆறு தோழர்களைக் காயப்படுத்தினர்.

23 கடலூரில் இரணியன் நாடகம். பதின்மர் கைது.

28 பெரியார் கைது பற்றிச் சென்னை சட்டசபையில் கேள்விகள். அமைச்சர் கோபால் ரெட்டியின் தெளிவற்ற பதில். இந்தியை எதிர்த்துப் பேசும் தாய் மொழியாசிரியர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சட்ட சபையில் கல்வி மந்திரி அவினாசியின் பதில்.

போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது; மீண்டும் தொடங்கும்

புதுக்கோட்டையில்

அடையாள மறியல்

'பொன்னி' ஆசிரியர் தலைமை தாங்கினர்

இந்தி எதிர்ப்பு அடையாள மறியல் பல்லவன் குளக்கரையிலுள்ள பிர தம்பாள் உயர்நிலைப் பள்ளிமுன்பு 15–9–48 அன்று வெற்றிகரமாக நடந்த பிற்பகல் ஒரு மணிக்கு, மறியல் தொண்டர்களான தோழர்கள், 'வாழ்வு ஆசிரியர் தே. நாராயணன், டி. எஸ். வடிவேலு, மா. சுப்பையா, எம். ே ரெங்கையா, ச. கு. சங்கரலிங்கம், ஆர். கணபதி, கிருஷ்ணன், வீரைய அருணசலம் ஆகியோர் மணிக்கூண்டின் அருகில் கூடினர். சரியாக 1-15க் பொன்னி ஆசிரியர், தோழர் முருகு சுப்பிரமணியன் தலைமையில் இந்தி எதிர்ப் ஒலிகளை முழக்கிய வண்ணம் இருவர்பின் இருவராகத் தொண்டர்கள் அ வகுத்து ஊர்வலம் வந்தனர். ஊர்வலம் கீழராசவீதி, வடக்குராசவீதி வழியே பள்ளியையடைந்தது. வழிநெடுகிலும், செந்தமிழ்ப் பதிப்பகம், அ. கு. சி. ஜவுளிக்கடை, தேவி கூல்டிரிங்ஸ், சி. வ. சுப்பையா நாடார் கடை, மருத பட்டி மீனுட்சி சுந்தரம் இல்லம், விடுதலை ஏஜன்ட் அருணசலம் கடை, ஆகிய இட களில் தொண்டர்களுக்குக் குளிர்ந்த பானங்கள் பருகக்கொடுத்து மலர்மா யிட்டு வாழ்த்துக்கூறி யனுப்பினர்.

சரியாக 2-மணிக்குத் தொண்டர்கள் பள்ளியின் இருவாயில்களிலும், இரு வினராக நின்று உட்செல்லும் மாணவர்களை வணங்கித் 'தயவு செய்து இ படிக்காதிர்கள்' என்று வேண்டிக் கொண்ட காட்சி, இளம் பிள்ளைகளின் நெ சைக் கவர்ந்தது. அவர்களும் ஆதரவுடன் தலையசைத்தும், 'படியோம்' எ விடை கூறியும், 'இந்தி ஒழிக' எனச் செந்தமிழ் முழக்கியும் பள்ளியுட் சென்றன 'இந்தி ஒழியணும்' என்று விந்தைத் தமிழிற் கூறிப் பார்ப்பனப் பையனொரு னும் பள்ளியுட் சென்றுன். மற்றப் பள்ளி மாணவர்களும், போலீஸ் அதிகா கல்வியதிகாரி, ஊர்ப் பெரிய மனிதர்கள், பொதுமக்கள் அனைவரும் மறிய காணக் கூடிக் குழுமினர். மாணவர் கூட்டமொன்று வந்து, இந்திப் புத்தக தைப் பள்ளியின்முன் வைத்துக் கொளுத்தி 'இந்தி ஒழிக' என எழுந்து முழ கிற்று !

2-30 மணிக்குப் பள்ளி துவங்கியதும், மறியல் தொண்டர்களனைவரும் மீ டும் இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழக்கியவாறு வடக்கு ராசவீதி, மேல ராசவீ கடைத்தெரு, கீழ இரண்டாம் வீதி, தெற்கு நாலாம் வீதி, வழியே வந்து மணி கூண்டை யடைந்தனர். தொண்டர்களுக்கும், கூடிநின்று ஆர்வங்காட்டி பொதுமக்களுக்கும் தலைவர் நன்றி கூறினர். பின்னர்த் தொண்டர்கள் கலை சென்றனர்.

இம் மறியலின்போது, மாணவர்களும் பொதுமக்களும் 'இந்தி ஒழிக' என் அட்டைகளைச் சட்டையிற் குத்தியிருந்ததும், தோழர்கள் அரு. பெரியண்ண இராம கலியாணசுந்தரம், ஜெயகோவிந்தன், முத்து, சந்தானம் ஆகியோ முன்னின்று நடத்திவைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும். புதுக்கோட்டை மக் ளிடையே இம்மறியல் சென்னை அரசினரின் விரும்பத்தகாத இந்திநுழைப்பை பற்றி எதிர்ப்புணர்ச்சியையும் கிளர்ச்சியையும் பரவவிட்டிருக்கிறது.

இந்தி வந்தது, இந்தி!

பல தோழர்களின் ஆர்வம் பக்கக் கணக்கில் மிகுந்துவிட்டது. அத்தனையையும் வெளியிட இயலாமைக்கு வருந்துகிறோம். நூற்றுக்கணக்கில் குவிந்திருக்கும் கடிதங்களில் ஒருசில இவை. மற்றவை பின்னர் வெளிவரும்.

பொள்ளாச்சி
6-9-48

திருந்துவரா ?

தமிழகத்தில் தமிழ்மொழியிலேயே அரசியல் நடக்க ஏற்பாடு செய்வதாகக் கூறிய அமைச்சர் அவினாசியார் "இந்தி படிப்பவருக்கே இனி உத்தியோகத்தில் சலுகை காட்டப்படும்" என்று தன்மானமிழந்து தாறுமாறாக நாளொரு சட்டமும் பொழுதொரு திட்டமுமாக - மனம்போன போக்கில் தமிழருக்குத் தீங்கு செய்யும் வடநாட்டு இந்தியை வலுவில் நுழைத்துப் பள்ளிச்சிறுவர்களைப் பதற வைத்து விட்டார். "இந்தி வேண்டாம் மந்திரியே எச்சரிக்கை!" என்று தலைநகரில் மாநாடு கூடிச் சகல கட்சியினரும் எடுத்துக் கூறியதை ஏளனம் செய்த அரசினருக்கு எதிராகப் போர் தொடுத்து அமைதியான முறையில் மறியல் செய்வதை அடக்குமுறையால் தடுத்து விடலாமெனக் கனவு காண்கின்றனர் காங்கிரஸ் மந்திரிகள்! பாவம், புறமுதுகு காட்டாத போர்வீரர்கள் புற்றீசல் போலப் புறப்பட்டு மொழியைக்காக்க அழிவு வரினும் அஞ்சோம்! அஞ்சோம்! என-ஆர்ப்பரித்து நிற்கும் தமிழர் நாட்டில் இந்தி ஒழிந்தே தீரும் என்பதை இனியேனும் உணர்ந்து திருந்துவார்களா மந்திரிகள்? அல்லது................

கே. தி. இராசமாணிக்கம்

சேலம்
3-9-48

இதயம் பிளக்கும் எதிர்ப்பு !

எத்தனையோ எதிர்ப்பு, இதயம் பிளக்கக் கூடிய பரிகாசப் பேச்சு—கொதிப்பெறக் கூடிய அளவுக்குக் கோமாளிக் கண்டனக் கிண்டல்—இவ்வளவும் நமக்குப் பரிசாகக் கிடைத்தன, நமது நோக்கையும் போக்கையும் தெரிந்து தெளிவு பெறாதாரிடமிருந்து. இருந்தாலும் நமக்கு ஆத்திரமோ, சோகமோ, சோர்வோ, ஏற்பட வில்லை. கன்னல் தமிழைக் காக்க இன்னல் எது வரினும் ஏற்போம் என்று ஆயிரமாயிரம் தமிழர்கள் சூளுரைதந்த பிறகு வெற்றி யொன்றே உறுதி யன்றோ?

இரா. தனக்கோட்டி

ஆரூர்
7-9-48

சைபீரியாவில் விடட்டுமே!

போர் தொடங்கி விட்டது! ஆம்! தமிழ்நாட்டை என்றென்றும் வடவருக்கு அடிமையாக்க வந்த இந்தியை எதிர்த்துப் போர்தொடங்கி விட்டது! தாய்மொழியாம் தமிழ்மொழியைக்காக்கப் போர் தொடங்கி விட்டது! நடுக்காட்டில் தொண்டர்களை விட்டு வந்தால் போராட்டம் நின்று விடுமென்று ஆளவந்தார்கள் நினைக்கலாம். சைபீரியாவில் கொண்டு விட்டா

லும் போர் நின்று விடாது! தம்பி முன் விழிப்படைந்து விட்டான். இதயத்தில் கடைசித் துடிப்புள்ள வரை தமிழன் போராடியே தீரு வான். வெற்றி—அல்லது வீரமரணம்! இரண்டிலொன்று நிச்சயம்.

ச. நெடுமாறன்

சென்னை
17-9-48

இந்தி விடு தூது!

வாளேந்தும் மரபிலுதித்து நாலேந்தும் கும்பலுக்கு வால்பிடிக்கும் அவினாசியாரே! உமக்கு ஒரு வார்த்தை! வெள்ளை ஆட்சியை இந்நாட்டில் நிலை நிறுத்த-வழி கண்டு பிடித்த-மெக்காலே என்பான் ஒரு முறை சொன்னான்: "இந்தியாவை இழந்தாலும் இழப்போம்; ஆனால் எங்கள் ஷேக்ஸ்பியரை ஒருக்காலும் இழக்க மாட்டோம்!" என்று- அதே போன்று இன்றையத் தமிழகம் தங்களுக்கும் தங்கள் ஆட்சிக்குழுவினருக்கும் ஒரு தாக்கீது விடுகின்றது. "எங்கள் இன்பத் திராவிடத்தின் எழிலாட்சியைக்காண சிறிது காலம் பொறுமையாய் இருந்தாலும் இருப்போம். ஆனால் எங்கள் கன்னித்தமிழைக் கருவறுக்கவரும் காலனை இந்தியை காலம் நேர்ந்தால் எட்டிக்காலால் உதைக்கவும் பின்வாங்க மாட்டோம்." 'இந்தி விடுதூது' அனுப்பும் வடவருக்கு அது இங்கு செல்லுபடியாகாதென ஒரு 'தந்தி விடு தூது' அனுப்பி விடும் படியாய் உமக்கு அறிவுறுத்து கிறேம்.

மதிவாணன்

கோயமுத்தூர்
23-9-1948

ஓமாந்தூரார் ஏமாந்தார்

ஆரிய ஆதிக்கத்திலே, ஆரிய சூழ்ச்சியிலே, பிரதம மந்திரி ஓமாந்தூரார் ஏமாந்து விட்டார். கல்வி மந்திரி அவினாசியார் அயர்ந்து விட்டார். இழிவான இந்தியைத் தென்னாட்டிலே, திராவிடத்திலே புகுத்த வடவர், ஆச்சாரியார் மூலம் அவினாசியாரையும், ஓமாந்தூராரையும் கையாட்களாகக் கொண்டு விட்டனர். எதற்காக இந்த இழிவான இந்தி நுழைப்பு என்று அவினாசியார் பதில் சொல்வாரா? இந்தி படித்துத்தான் . அவினாசியாரும், ஓமாந்தூராரும் மந்திரியானார்களா? இந்த இந்தி இல்லாமல் இமயத்திலே நம் கொடிபறக்க வில்லையா? கடலுக்கப்பால் நம் புகழ் பரவ வில்லையா? புலவர்கள் தோன்ற வில்லையா? தமிழர் புகழுடன் வாழ வில்லையா? பின் எதற்காக இந்த இந்தி நுழைப்பு? ஆரிய ஆதிக்கம் அழியாமல் இருக்க ஆரியர் செய்யும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்று அவினாசியார் அறியட்டும்.

செல்வராஜ்

வெள்ளனூர்
29-9 48

வாளா யிருக்கமாட்டோம்!

இப்பொழுதுள்ள இந்திய அரசாங்கத்தினால் இந்தி மொழி அரசியல் மொழியாக்கப்பட்டு விட்டால், ஏற்கனவே சமஸ்கிருதம் கற்றுள்ள நாம் அதன் தங்கையான இந்தி மொழியை எளிதில் தெரிந்து கொண்டு தகுதி, திறமை காட்டி தம்பட்டமடித்து தொழில் துறைகளில் முதன்மையாக உட்கார்ந்து விடலாம் என்றுதான் இந்தியைப் பாடசாலைகளில் கட்டாய மொழியாக்கு என்று ஆரியம் கூப்பாடு போடுகிறது. ஆனால் தமிழ்நாட்டிலே, தமிழர் பரம்பரையிலே பிறந்து, தமிழ்த்தாயின் பாலுண்டு தமிழர் சூழ்நிலையில் வளர்ந்த சிங்கத்தமிழர் கூட்டம் இந்தியை நுழைய விட்டு வாளாயிருக்குமா? இருக்காது. ஆகவேதான் புறப்

பட்டு விட்டது போருக்கு. அதுவும் உடலையும், உயிரையும் பணயமாக வைத்து; ஏன் தங்கள் தங்கள் குடும்பங்களின் சுகவாழ்வுகளைக் கூடப் பணயமாக வைத்துப் போர்புரியத் தொடங்கிவிட்டனர். வெற்றிகமதே!

வே. வே. இளஞ்சேரியன்

கொழும்பு
21-8-48

போதும்! போய்வாரும்

எமது தமிழகத்துக் கல்வி மந்திரி அவினாசிலிங்கம் அவர்கள், செந்தமிழ் அறிஞர் சுவாமி விபுலானந்தரின் நினைவுச் சின்ன மண்டபத்திற்கு அத்திவாரக்கல்நாட்ட இலங்கைக்கு வருகின்ருரெனச் செய்தித்தாள் வாயிலாய் அறிந்தோம். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! தமிழ்த்தாயின் மகுடம் போன்ற சுவாமி விபுலானந்தருக்குக் கல்நாட்ட அத்தமிழன்னையைக் கொலைபுரிய, இந்தி 'யெனும் கூரிய கத்தி கொண்டு அலையும் இம்மந்திரியைத் தவிர வேறு எவரும் நம் தமிழ் நாட்டில் இல்லையா! மறு உலக வாழ்க்கையில் புகுந்து, புகழுடம்பு வாய்ந்த, சுவாமி விபுலானந்தரின் "ஆன்மாவிற்கும்" இவர் கல் நாட்டும் கொண்டாட்டம் கசப்புக்குரியதேயன்றி, களிப்புக்குரியதன்று. சுவாமி விபுலானந்தர் நம் மத்தியில் இன்று இருப்பின், வட இந்திப் பாம்பை நம் தமிழகத்தில் விடத் துணியும், இவர் வாக்கைத் துண்டு துண்டாகத் துணித்தெறிவார் என்பதற்கு அச் சுவாமிகளின் தமிழ்ப் பற்றே நமக்குச் சான்றுபகரும். ஐயா! அவினாசிலிங்கமே! போதும்! போதும்!! நீவிர் கல்நாட்டியது போதும்!! தமிழ் நாட்டைத் துன்புறுத்திய தங்கள் முன்பு, இதோ! இலங்கைத் தமிழ் மக்களாகிய நாங்கள் கருப்புக் கொடி பறக்க விடு

இன்றேம், தயை கூர்ந்து ஏற்றுக் கொள்க.

மைக்கேல்ருபின் வருமன்
முதலிய தோழர்கள்.

மதுரை
24-9-48

அவலநிலை இன்னுமா?

"இந்தியும் ஓர் மொழிதானே. ஏன் எதிர்க்க வேண்டும். இதெல்லாம் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யும் சூழ்ச்சி" என ஒரு சிலர் கூறுகின்ருர்கள். அவர்கள் கூறுவதுபோல் இந்தி எதிர்ப்பானது தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யும் சூழ்ச்சியல்ல. வடநாட்டாரின்-இந்தி ஆதரவாளரின்-ஏகதேசாதிகாரம் - சர்வாதிகாரம்-இந்தியாவில் அதுவும் தமிழகத்தில் பரவி விடாக் கூடாதே என்ற எண்ணத்தினுல் தான் இந்தி எதிர்ப்பு ஆரம்பமானது. இந்தியை ஆதரிப்பவர்கள் யார்? பணம் படைத்த முதலாளிகளும், வட நாட்டாருள் ஒரு சில கூட்டத்தாருந்தான். தமிழன் இந்தியை எதிர்ப்பது அதன் மேலுள்ள துவேஷத்தினுல் அல்ல. இந்தியை ஆதாரமாகக் கொண்டு வடநாட்டார் தங்களது ஆதிக்கத்தை தமிழகத்தில் நிலைநாட்ட எத்தனிக்கின்றனர். இதைத்தான் தமிழன் எதிர்க்கிருன். பிரிட்டிஷாரின் ஆட்சியில் பட்டபாட்டை அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. அந்நிலை மறுபடியும் இந்தியாவில் நிலைபெற வேண்டுமா? ஆகவேதான் எதிர்க்கிறோம் இந்தியை. ஆங்கிலத்தை எதிர்க்கலாமே? அதை ஏற்றுக்கொண்டு இந்தியை மட்டும் எதிர்ப்பானேன், எனச் சிலர் கேட்கின்றனர். தமிழன் இந்தியைக் கற்றுக் கொள்ளத் தயார்-எப்பொழுது? அதில் பண்பாடு இருக்குமேயானுல், ஆங்கிலத்தைக் கற்றதுபோல் இந்தியைக் கற்கவும் தமிழன் தயார். அதை யாரும் தடைசெய்ய முடியாது.

கட்டாயப் படுத்துவதைத்தான் எதிர்க்கிறான் தமிழன், பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட அவல வாழ்வு இன்னும் நீடிக்க வேண்டுமானால் இந்தியை அரசியல் மொழியாகக் கைக்கொள்ளலாம். அவல வாழ்வு – நிலை-மறுபடியும் வரவேண்டுமா? அதை ஏற்கத்தயார் தானா? கல்வியமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் '**இந்திய மொழிகளில்**' என்ற வார்த்தையை வெளியிட்டிருக்கிறார் அப்படியானால் தமிழும் இந்திய மொழிதானே- பிற மாகாணங்களில் இரண்டாவது பாடத்திட்டத்தில் தமிழுக்கு இடமளித்திருக்கிறாரா? செயலிலில்லா விட்டாலும் திட்டத்திலாவது உண்டா? சிந்தியுங்கள் தமிழர்களே! தமிழா! தூங்காதே. பரந்த நோக்கங் கொண்டுதான் இந்த இழிநிலையடைந்தாய். தமிழகத்தில் தாழ்வு தரும் எதையும் புக விடாதே! எதிர்த்துப் போரிடு! தமிழுக்காக உயிர் துறந்த தோழர்கள் தாளமுத்து நடராசனைக் கருத்தில் கொள். உன் உயிர் உடலிலுள்ள வரை எதிர்த்துப் போராடு. உனது உடலிலுள்ள ஒவ்வொரு துளி ரத்தத்தையும் தமிழன் முன்னேற்றத்திற்கு அர்ப்பணி. வெற்றியின் சிகரத்தை நோக்கிப் போரிடு. தயங்காதே!

மு- தமிழன்பன்

காஞ்சீபுரம்

25-9-48

கேலிப்பரீட்சை

மனிதனை மந்தியாக்குவது இந்தி! என்று நம்தமிழ்நாட்டுக் கல்வியமைச்சருக்கு அறிவிக்கிறோம்' நம் தமிழ் நாட்டுக் கல்வித் திட்டத்தில் இந்தியைக் கட்டாயக் கல்வியாக ஆக்கியிருப்பதை தன்னையுணர்ந்த மனிதன் எவனேனும்; தன் தாய்மொழியைத் தவிர வேறெந்த மொழியேனும் கட்டாயமாகக் கற்க மாட்டான். அப்படியிருக்கத் தமிழ்நாட்டில் இந்தியைக் கட்டாய பாடமாகவைத்துக்கேலிப் பரீட்சை செய்கிறார் கல்வி மந்திரி இது தன்னைத்தானே கேலிசெய்து கொள்வதாகும் என்று உணர்ந்து கொள்வாரா?

சா. சேதுராமலிங்கம்

சிவகெங்கை

27–9–48

தறுதலைகளை விடோம்!

கட்டாய இந்திதனை எதிர்த்திடக் காளைகள் நாங்கள் அஞ்சோம். தமிழ்ப் பெரியார்களின் கட்டளையைத் தலைமேல்கொள்ளத் தனயர்கள் நாங்கள் தயங்கோம். அவினாசியார் கும்பலுடன் அறப்போரிட்டு அவனியிலே வெற்றியை அடைவோம். தமிழ்த் தாயைத் தரணியிலே தாழ்த்த நினைக்கும் தறுதலைகளைத் தப்பவிடோம். எங்கள் தாய் என்றென்றும் ஏற்றமுற வேண்டுமென்று எண்ணி உழைப்போம். கட்டாயஇந்திதனைக் கடிதே ஒழிக்கக் கணமும் மறவோம். இதுவே எங்கள் எண்ணம்.

அருணகிரி

சென்னை

22–9–48

தோழர்களே கேளுங்கள்

தோழர்களே! திராவிடத்தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் தலைமையில் மாத்திரம் இன்று எதிர்ப்பு மறியல் நடைபெறுவதால் காங்கிரஸ் இதனை அரசியல் காரணம் என்று கூறி உங்களை ஏமாற்றப் பார்க்கிறது. காங்கிரஸுக்கே அல்லும் பகலும் உழைத்து வருகிற ம. பொ. சி.

அவர்கள் தலைமையில் உள்ள தமிழரசுக் கழகத்தார் இந்தியை எதிர்ப்பதனையும் சிந்தியுங்கள். புலவர்கள் பலர் ஒரு கட்சியையும் சேராதவர்கள் இந்தியை எதிர்ப்பதையும் நினைவு கூருங்கள். இந்தி, மொழிப் பிரச்சினையே அன்றி அரசியல் பிரச்சினை ஆகாது. நம் நாட்டு மொழி உயர்ந்தால் அன்றி நாமும், நம் நாடும் உயரமுடியாது. மொழியின் விதியை நிர்ணயிக்கவேண்டிய அறிஞர்கள் நம்மிடையே பலருண்டு. அவர்களின் கூற்றை ஆராய்ச்சிக் கண்ணுடன் கூர்ந்து கவனிக்க வேண்டியது நம் கடன். முடிவாக இந்திப் பிரசாரகர்களே! நீங்கள் நேர்மையான முறையில் பேசி இந்திக்கு இந்த நாட்டில் ஆதரவு தேடுங்கள். அதற்கு உங்களுக்குப் பூரண உரிமையுண்டு. ஆனால் அறிவுக்குப் பொருத்தமற்ற மற்றவற்றைப் பிதற்ற வேண்டாம்.

நம்மைவிட அறிஞர்கள் இல்லையென்று இறுமாந்து இருக்கவேண்டாம். அறிஞர்கள் இந்த நாட்டில் உண்டு என்பதை எண்ணியே சொற்பொழிவாற்றுங்கள். பொது மக்களும் விழிப்படைந்துள்ளார் என்பதை நீங்கள் நன்கு மனத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள்.

தோழர்களே இன்று! நாம் பல சூழலில் அகப்பட்டுத் தத்தளிக்கிறோம். விழிப்பாயிருக்கவேண்டிய நேரம். சென்னையில் நகரசபைத் தேர்தலுக்குப் படித்தவர்களுக்கு ஓட்டு அளிக்காதீர்கள் என்றுகூறும் பிரகஸ்பதிகள் நிறைந்த நாடு இது! இந்தியைப்பற்றிவிளக்க வேண்டிய அவசியமில்லை. இந்தியை எதிர்க்க எவ்வித தியாகத்திற்கும் முன்வாருங்கள். 'இந்தியை ஒழித்துவிட்டுப் பிறவேலை' என்பதற்காக அழைப்பை எதிர்நோக்கியிருங்கள். நாடு உங்கள் உழைப்பை விரும்பியவுடன் தீயில் குதியுங்கள். வெற்றியை நிலை நாட்டுவோம். தமிழை வளர்ப்போம். தமிழுக்காகவே உயிரையும் விடுவோம்.

இரா. கதிர்வேல் முருகன்

மதுரைக் கல்லூரி

மதுரை

29-9-48

நஞ்சு கலவாதீர்!

சிந்தியாது இந்தியைப் புகுத்தி மந்தித்தனம் செய்யும் கல்வியமைச்சரே! நயமாகக்கூறுகின்றோம்! நஞ்சைக் கலக்க வேண்டாம் செந்தமிழ்த்தேன் குளத்திலே! நாற்றிசையும் சென்று வீற்றிருந்த தமிழ் நாட்டிளங்காளைகள் ஆர்த்தெழுந்து போற்றியே தீர்வோம் எம் தாய் மொழியை! உயிர் போக்கவும் யாம் அஞ்சப் போவதில்லை என்று பொங்கிக் கொதித்துக் குமுறி எழுந்து விட்டனர்! சீரற்ற இந்தியை வேரற்று வீழச் செய்யப் பேர்பெற்ற செந்தமிழ்க் கூட்டம் பெருமிதத்துடன் கிளர்ந்தெழுந்துவிட்டது. இணையற்ற வீரா மலிந்த இன்பத் தமிழ்நாட்டிலே கனைகுரற் கயவர் மொழி இந்தியைப் புகுத்தினால் அணை போட்டாலும் தடுக்க முடியாத ஆத்திர உணர்ச்சி வெள்ளம் அன்புத் தமிழர்பாலிருந்து கிளம்பி நும் ஆதிக்க வெறியின் அடையாள இந்தியை அடியோடு ஆழ்த்தி அழிக்கும் என்பது நிச்சயம் தெளிவாகப் போகிறது. எனவே இறுதியாக ஒரு எச்சரிக்கை! 'துஞ்சுபுலி இடறிய சிதடன்', குருடன் கதியே இந்திக்கும் நேரும் என்பதை இறுதியாகக் கூறி எச்சரிக்கின்றேன்!

அ. சண்முகக்கனி

வழிப்பறி


எம். எஸ். மணியன்

மாலை நான்குமணி: கோவில் பட்டிச் சாலைவழியாக நடராசஐயர் போய்க் கொண்டிருந்தார்: கழுகு மலைக்கு ஆறணாக் கொடுத்துச் செல்ல வேண்டும் பஸ்ஸில்: அந்த் ஆறணா மிச்சத்திற்காக ஐயர் நடந்து சென்றார்: மங்கியமாலை யாகையால் சாலையில் யாரும் போவார் வருவாரைக் காணோம்: அவர் கால்கள் விரைந்தன:

நாலைந்து மைல்கள் சென்றவுடன் ஓர் மரத்தடியில் இருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டார் ஐயர்: அவர்கள் சிட்டைப் புரட்டிக் கொண்டிருந்தனர்: ஐயர் சூது விளையாடுபவர் என நிச்சயித்துக் கொண்டார்: அவர்களை நெருங்கியதும் அவர்களில் ஒருவன் "டேய் குப்பா இதோ போகும் ஐயருக்காக ஐந்து ரூபாய் வைக்கிறேன்" என்றான்: பின் குப்பன சிட்டைப் புரட்டிவிட்டு. 'அண்ணே ஐயர் கெலித்து விட்டார்' என்று தன் பையிலிருந்து ஐந்துரூபாயைக் கொடுத்தான்: அந்த அண்ணனும் ஐயரிடம் ஓடி "சாமி, உங்கட்குச் சிட்டில் ஐந்து ரூபாய் வைத்தேன். தாங்கள் ஜெயித்துவிட்டீர்கள்: அந்த ஐந்துரூபாய் இதோ" என்று கொடுத்தான: ஐயரும "எனக்குத் தெரியும் என அதிர்ஷ்டத்திற்குக் கிடைக்கும்" என்று வாங்கிக்கொண்டு மேலும் நடந்தார்: ஏமாந்தவன் என எண்ணிக் கொண்டார்

திரும்பி வந்த அண்ணன் மறுபடியும் "அந்த ஐயருக்காகப் பத்து ரூபாய் வைக்கிறேன்" என்றான்: குப்பன் சிட்டைப் புரட்டிவிட்டு" ஐயர் தோற்று விட்டார் "என்றான்: அண்ணன் ஓடினான் ஐயரிடம்; "சாமி. தங்கட்காக மறுபடி பத்து ரூபாய் வைத்தேன தாங்கள் தோற்று விட்டீர்கள். தோற்ற பத்து ரூபாயைக் கொடுங்கள 'என்றான: ஐயர் "உன்னையார் எனக்காக வைக்கச் சொன்னது? என்றார்:

அதற்கு அண்ணன் "முதலில் தாங்களா என்னை வைக்கச் சொன்னீர்கள்? ஏன் ஐந்து ரூபாயை வாங்கினீர்கள்? என்றான் ஐயர் தன் தவறுதலையும் ஏமாற்றத்தையும் உணர்ந்தார்.



அண்ணனின மீசையையும் தோற்றத்தையும் கண்ட ஐயர் தன கையிலிருந்த ஐந்து ரூபாயையும் முதலில் அவன்கொடுத்த ஐந்து ரூபாயையும் கொடுத்து விட்டு வழிநடந்தார். பாவம்! ○

அறிஞர் அப்பாத்துரை

தமிழ் அறிவுக் - - - - களஞ்சியம்

7. தேசியமும் தமிழியக்கமும்

மற்றஎல்லா மொழிகளையும் போலவே தமிழிலும் அறிவுக்களஞ்சியம் ஏற்படுவது இன்றியமையாதது என்றும்; தமிழகத்தின் இன்றைய சூழ்நிலைகளிடையே தமிழக மறுமலர்ச்சி ஒருமுகப்பட்டு நாட்டியக்கம் ஆகவில்லையென்றும்; அம்முயற்சியை இன்று கைக்கொள்பவர்கள் மறுமலர்ச்சி என்ற பெயரால் எதிர்மலர்ச்சியில் தெரிந்தோ தெரியாமலோ ஈடுபட்டவர்கள் ஆதலால் அம்முயற்சியில் இன்று தவறான தலைமை இருந்து வருகிறது என்றும்; அதனால் ஏற்பட்ட இருவகைப் பழமை (புராணப் பழமை இடைக்காலப் பண்டைச் சங்கப் பழமை)கள் முதலிய குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் இதுகாறும் விளக்கியுள்ளோம். தமிழறிவுக் களஞ்சிய முயற்சி தமிழகத்துக்கும் தமிழக மூலம் உலகுக்கும் பயன்பட வேண்டுமானால் தமிழகத்தில் தமிழியக்கம் ஒரு தேசிய இயக்கமாக வளர்ந்து தேசிய மதிப்புப்பெற வேண்டும். இன்று தேசியம் என்ற பெயருள் தமிழ் நாட்டில் வழங்கப்படும் இயக்கம் இந்திய மாநிலத்தேசியம் ஆனால், அது தமிழை எம்முறைகளில் தாக்குகிறதென்று விளக்குவோம்.

நில இயல் முறைப்படி தமிழகம் இந்திய மாநிலத்தில் ஒரு பகுதி. வரலாற்றிலோ அது இந்தியாவுடன் ஒன்றுபடாமல் தனித்து வாழ்ந்து வந்துள்ளது. அதனாலேயே இந்திய வரலாற்றில் அதனை ஒதுக்கி வைத்துவிட முடிகிறது. அதனைச் சேர்ப்பதும் உண்மையில் முடியக்கூடியதல்ல. ஏனெனில் அவை தனிவேறு ஆறுகளாகவே ஓடுகின்றன. வரலாற்று நூல்களில் வடநாட்டு வரலாறு முடிந்தபின், அல்லது அதன் ஒருபகுதி முடிந்தபின், தென்னாட்டு வரலாறு சிறுக ஒரு 'அத்தியாயமாக' தனிப்படவே தரப்பட முடிகிறது.

வரலாற்றில் இங்ஙனம் தனிப்பட்டு நிற்பது தமிழக மட்டுமன்று, தென்னாடு முழுவதுமேயாகும். உண்மையில் தென் இந்தியாவின் இடைப் பகுதியாகிய தெக்கணத்தின் வரலாறு வட இந்தியாவை

விடத் தமிழகத்துடனேயே நெருங்கி உறவுடையது. ஆகவே தமிழகம் இந்தியாவினின்று தனிப்பட்டதாயிருந்ததுடன் நில்லாது, தென் இந்தியாவின் பிற பகுதிகளையும் தனிப்படுத்தியதாயிருந்தது.

இங்ஙனம் தனிலாற்ற வாழ்ந்த தமிழகம் தென்னிந்திய இணைப்பிணைக் காட்டுவதாகச் சேர்த்துக் கொண்டது. 12-ம் நூற்றாண்டுக்குப்பின் தமிழக இயக்கங்கள் தென்னாடு கடந்து வட நாட்டிலும் பரவியபின் வட இந்தியாவிலும் தேசிய உணர்ச்சி பரவியது. பிரிட்டிஷ் ஆட்சியில் வடக்கும், தெற்கும் பிணைக்கப்பட்டபின் தமிழகத் தேசியம் தளர்ந்தது, புதிய தேசியத்தில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டது. அத தேசியத்தில் தனிநிலை தலைமைநிலைகளைமட்டுமன்றி உறுப்பு நிலைமையைக் கூடப் படிப்படியாக இழந்தது.

என்றுமே பிற மொழியாட்சிக்கு உடந்தையாயிருந்து தாய்மொழி வளர்ச்சியைத் தடை செய்துவந்த ஆரியர், தமிழ் நாட்டினுள் தாய்மொழி வ்ளர்ச்சியை முற்றிலும் தடுக்க முடியாதுபோயிற்று. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் ஆங்கில மொழிக்குச் செல்வாக்கு வந்ததும் அதனை ஆர்வத்துடன் ஏற்றுத் தமிழைத் தாழ்த்த விரைந்தனர். ஆனால் ஆங்கிலக் கல்வி எல்லாரிடமும் பரவுந்தோறும், தமிழ் வகுப்பினர் ஆர்வத்தால் உயிர்த்து நின்ற தமிழ் அவர்கள் வளர்ச்சியுடன் ஒன்றுபட்டு வளரலாயிற்று. ஆயினும் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்த புதிய தேசிய இயக்கத்தில் தாய்மொழிப் பற்றுள் ஆதிக்கம் குறைந்திருந்ததனால் தமிழியக்கம் வேறாகவும் தேசிய இயக்கம் வேறாகவும் நடைபெற்றன.

தற்போது தமிழியக்கமும் தேசிய இயக்கமும் ஒன்றுபட்டு ஒரே இயக்கமாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. ஆயினும் அவை ஒன்றுபட இரண்டு பெருந்தடைகள் இன்றும் உள்ளன. என்று பழய தேசியம் தாய்மொழிகளைப் பொதுவாகவும் தமிழைச் சிறப்பாகவும் புறக்கணித்தும் நாட்டு மக்கள் தலைமை நிலை குன்றி ஒருவகுப்பாதிக்க முடையதாயும் இருந்தது. இரண்டாவது உண்மைத் தேசிய உணர்ச்சி பெறாத பிற இந்தியமாநிலப் பகுதிகளுடன் இணைக்கப்பட்டு இந்தியமாநிலத் தேசியமாக அது கொள்ளப்பட்டது.

இந்தியாவில் மூன்றுவகையான தேசியங்கள் உள்ளன. வட இந்தியாவில் தேசவளர்ச்சியுடன் வளர்ந்த மொழிகள், இலக்கியங்கள் கிடையாது. தென் இந்தியாவில் அங்ஙனம் வளர்ந்த மொழியிலக்கியங்கள் (தமிழ், கன்னடம், தெலுங்கு. மலையாளம்) உண்டு. வட இந்திய இலக்கியங்கள் 200 ஆண்டு பழமையுடையன; 2000 ஆண்டு பழமையுடைய வட இந்திய நாகரிகமுற்றும் தாய்மொழிக் கலையற்ற நாகரிகமே, தெலுங்கு கன்னடமுதலிய மொழிகள் 1000 ஆண்டுக்கு மேலிட்ட பழய இலக்கியமுடையவை. வட இந்தியாவின் பெருமையைக் காப்பாற்றும் வடமொழி இலக்கியம்கூடப் பெரிதும் தென்னாட்டில் வளர்ச்சியடைந்ததே. தமிழகத்திலோ 2000 ஆண்டுகட்கு மேற்பட்ட

பழமையுடைய பண்டைய இலக்கியம் - வடமொழி இலக்கியத்திலும் எவ்வளவோ பழமையுடைய இலக்கியம் உண்டு.

எனவே தென்னாடு தனித்த ஒரு தேசம். அதன் கலப்படம் குறைந்த உயிர்ப்பகுதி தமிழகம். வடநாடுகண்ட தேசியம் நுனிப்புல் தேசியம். வட இந்தியாவையே ஒற்றுமைப் படுத்த இயலாதது; தாய் மொழிப்பற்றுக் குன்றிய அத் தேசியம். மககள் தேசியமாக வளர நெடுநாள் செல்லும்.

இன்று தமிழ் நாட்டில் இந்திய மாநிலத்தின் உண்மைத் தேசிய போலித் தேசியப் போராட்டம் நடந்துப் வருகிறது. உண்மைத்தேசியம் தனித்தமிழியக்க அடிப்படையிலும் போலித்தேசியம் கலப்புத் தமிழியக்க பிறமொழியாக்க இயக்க அடிப்படைகளிலும் ஒருங்கே வளர்க்கப்பட்டுப் போராடுகின்றன. இப்போராட்டமுடிவு தமிழ், தமிழகம் ஆகியவற்றின் எதிர்காலத்தை மட்டுமன்றி, தென்னாட்டின் எதிர்காலத்தை அண்மையிலும், இந்தியாவின் எதிர்காலத்தை உலகத்தில் எதிர்காலத்யையும்ம் நாளடைவிலும் தாக்குவது ஆகும்.

தமிழறிவுக் களஞ்சியம் தனித்தமிழியக்கத்தவர் களஞ்சியமானால் அது தமிழகத்துக்கு ஒரு ஞாயிறும் தென்னாட்டுக்கு ஒரு முழு நிலவும், இந்திய மாநிலத்துக்கு ஒரு வடமீனும் உலகிற்கு ஒரு விளக்கும் ஆக இயலும். அது பிற இயக்கமானால் அது தமிழ் நாட்டின் இருளும் தென்னாட்டின் இருட்டடிப்பும் இந்தியாவின் அரையிருளும் உலகின் ஒளிமறையுமாகவே இயலும்.



கும்பகோணம் இந்தி எதிர்ப்பு அடையாளமறியலில் தொண்டர்கள் ஊர்வலம் வரும் காட்சி.



வளரும் இலக்கியம்

சேவல் ★ ★

சிறுவர்களுக்கென்று எத்தனையோ பத்திரிகைகள் வந்துள்ளன. அவற்றிலே முதன்மையான இரண்டு மூன்று பத்திரிகைகளில் சேவல் ஒன்று. கொச்சைத் தமிழும், அம்மாமித் தமிழும் எழுதி இது தான் குழந்தைகளுக்குப் புரியும் மொழி என்று சொல்லாமல் நல்ல எளியதமிழில் கட்டுரைகள் அமைந்துள்ளன. கதைகள் பகுத்தறிவை வளர்ப்பனவாக உள்ளன. 'இங்கு நடப்பது' என்ற பகுதியில் இந்திய அரசியல் நிகழ்ச்சிகள் எளிய முறையில் தரப்படுகின்றன. மொத்தத்தில் 'சேவல்' சிறு குழந்தைகளுக்கு நல்ல தோழன். வாரப்பத்திரிகை. விலை 1 அணா. ஆசிரியர்: கோ. கணபதி. 1, தர்மராசா கோவில் முதல் சந்து சென்னை.

மகாத்மாவின் மரணசித்திரம் ★ ★

காந்தியார் இறந்தபின் அவருடைய 'ஆத்மா' சுவர்க்கலோகம் செல்வதாகவும், அங்கு வேறு பல தேசபக்த 'ஆத்மா'க்களைக் கண்டு பேசுவதாகவும் கற்பனை. அரசியல் கிண்டலாகவும், காந்தியாரின் உண்மைக் கொள்கைகள் பற்றிய ஆராய்ச்சியாகவும் விளங்குகிறது இந்நூல். ஆசிரியர்: கே.எ. பண்டிதர். ஹொக். ஜலி.கம்பெனி.27 கிரீன் ஹால். பினாங்கு.

இந்திமறுப்புப் பாடல்கள் ★ ★

வெற்றி வெற்றிஎன ஒலித்திடுதே—எங்கள்
வீரத் திராவிடர் போர்முரசம்!
நெற்றி சுருக்குதல் சரிதத்திலும்—இல்லை
நீட்டிய வாலை மடக்கிடுவீர்!

என்று வடவருக்குப் போரோலை அனுப்பும் எழுச்சிப் பாடல்கள் நிறைந்த தொகுப்பின் ஆசிரியர் புதுவைச்சிவம். எல்லாம் மேடையில் பாடத்தக்க மெட்டுப் பாடல்கள். விலை 3 அணா. ஞாயிறுநூற் பதிப்பகம் 28, அம்பலத்தாடு ஐயர் மடத்துத்தெரு, பாண்டிச்சேரி.

முத்ரா ராக்ஷஸம் ★ ★

இது ஒரு வடமொழி நாடகம். அரசபக்தி நிறைந்த அமைச்சன் ராட்சசன் என்பவன் தன் அரச வம்சத்தை மறுபடியும் அரியணையேற்றப் பல சூழ்ச்சிகள் செய்து பார்க்கிறான். அத்தனையும் வியக்கத்

தக்க சூழ்ச்சிகளாகவே யுள்ளன. ஆனால் சாணக்கியன் முன் இவனுடைய சூழ்ச்சிகள் தூளாவதையும், சாணக்கிய சூழ்ச்சிக்கு முன் ராட்சசன் வீழ்ச்சியடைவதையும் நாடகம் அழகுறச் சித்தரிக்கிறது. சாணக்கியரின் கைப்பொம்மையாக விளங்கும் சந்திர குப்தனின் மனப்போராட்டமும் அழகுறச் சித்தரித்து வைக்கப்பட்டிருக்கிறது. மொழிப் பெயர்ப்பும் நன்ருகவே யுள்ளது. ஆசிரியர் விசாகதத்தர். மொழிபெயர்த்தோர் வே. சீனிவாச சாஸ்திரி, தே. சீநிவாசாச்சாரியார். விலை $1\frac{1}{2}$ ரூபாய். சக்தி காரியாலயம் சென்னை, 14.

அபேதவாதம் ★ ★

சில ஆண்டுகளுக்கு முன் திரு. சி. ராஜகோபலாச்சாரியார் சிறையிருந்த போது, அங் இருந்த மற்ற கைதிகளிடையே செய்த சொற்பொழிவுத்திரட்டு இந்நூல். 'பொதுவுடைமை என்பது நடைமுறைக்குச் சரிப்பட்டு வராது என்று சொல்லுபவன் கடவுளிடமே நம்பிக்கையில்லாதவன். எல்லோரும் சுகமாய் வாழ்வதற்கு இந்த உலகம் போதாது என்றும், சிலரே இதில் சந்தோஷமாய் வாழ முடியும் என்றும் நினைப்பவன் அவன். அது தான் நாஸ்திகம்' என்று ஓரிடத்தில் குறிப்பிடுகிருர். பொதுவுடைமைபற்றி உள்ள ஐயங்களுக்கு விடை கூறி, எல்லா வகையிலும் பொதுவுடைமை இலட்சியம் தான் உலக இயல்புக்கு ஒத்தது என்று விளக்குகிருர். கடைசியில் உலகில் பொதுவுடைமைக் கொள்கைதான் அரசாளும் என்று முன்னறிவிப்புக் கொடுக்கிருர். இதைப் பேசும் பொழுது ராஜாஜி, கைதியாக இருந்தார், கவர்னர் ஜனரலாக அல்ல என்பதை நினைவுவைத்துக் கொண்டு படிக்க வேண்டிய புத்தகம். விலை ரூபாய் ஒன்று, சக்தி காரியாலயம் ராயப்பேட்டை, சென்னை 14.

சக்தி பிறக்குது ★ ★

சுதந்திரத்தை இந்தியர் கையில் வைத்துவிட்டு வெள்ளைக்காரன் வெளியேறினதை யொட்டிப்பாடிய சுதந்திரப் பாடல்கள் இவை. 'சுதந்தரப் பட்டணம்' 'சக்தி பிறக்குது' என்ற பாடல்கள் நன்ருக இருக்கின்றன. ஆசிரியர் 'சுரபி'. விலை ஆறணு. சக்தி காரியாலயம் சென்னை. 14.

வரப்பெற்ருேம்

பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதங்கள்—லோகோபகாரி வெளியீடு, சென்னை. விலை 8 அணு.

ஜேகோஷ மாலை—ஆசிரியர் க. இ. குமாரசிவம். விலை நாலணு. க. ந. கந்தசாமி, கணபதி போஸ்டு, கோயம்புத்தூர்.

நட்சத்திரம்—மாதமொரு புத்தகம். ஆசிரியர் தாமரைக் கண்ணன். விலை 2 அணு. நட்சத்திரம் காரியாலயம். உப்பார வீதி, கோயம்புத்தூர்.

அச்சாளன்—ஆசிரியர் டி. எஸ். ஜி. சாமி. ஆண்டுச்சந்தா ரூ. 1—8—0, கதிரேசன் பதிப்பகம், கீழலங்கம், தஞ்சை.

இது தானா பரிசு?

அத்தான்




மீனாள் ஆறுமுகத்தினுடைய அருமை மகள். அவளுக்கு ஒரு நாய்க்குட்டியை வளர்க்க வேண்டுமென்று ஆசையாயிருந்தது. அப்பாவிடம் சொன்னாள். முதலில் ஆறுமுகம் வேண்டாமென்று சொல்லிப்பார்த்தார். மீனாள் பிடிவாதம் பிடிக்கவே சரியென்று ஒப்புக்கொண்டு அழகான நாய்க்குட்டியொன்று வாங்கிக் கொடுத்தார்.

மீனாள் நாயைச் செல்வமாக வளர்க்க ஆரம்பித்தாள். தினந்தோறும் பால் வைப்பாள். நாய்க்குட்டிக்கு அந்தப் பால் மிகவும் பிடித்திருந்தது. ஆனால் இன்னும்கொஞ்சம் அதிகமாய்க் கிடைத்தால் தேவலாம் என்று வாய் ஊறியது. மீனாளிடம் கேட்கலாமென்று நாய் எண்ணியது. மீனாள் மிகவும் நல்லவள் - ஆனால் அவளுடைய அம்மாள் தான் மிகவும் கெட்டவளாயிற்றே! கிண்ணம் நிறையத் தினந்தோறும் கிடைக்கின்ற பால்கூட மீனாள் போடும் சண்டையின் வெற்றிதான் என்பது நாய்க்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்க மீனாளிடம் கேட்பதில் பயனில்லை என்ற முடிவிற்கு வந்தது.

வீட்டிலிருப்பவர்களுக்குத் தெரியாமல் பசுமாட்டிடம் நேரே சென்று பால்குடித்தால் என்னவென்று ஒரு யோசனை தோன்றியது. நிறையக் குடிக்கலாமென்ற ஆசை அதை உற்சாகப்படுத்தியது.

கம்பீரமாக நின்றுகொண்டிருந்த பசுமாட்டிடம் நாய் சென்றது.

"அக்கா! அக்கா! நீதான் இந்த வீட்டில் பால்கொடுக்கிறாயா?" என்று கேட்டது.



"ஆமாம் தம்பி! இந்த வீட்டிற்கு நீ புதிது போலிருக்கிறதே" என்றது பசு.

"நான் வந்து நான்கு நாளாகிறது" என்றது நாய்.


"மிகவும் மகிழ்ச்சி" என்றது பசு.

"இன்றுமுதல் நாமிரண்டு பேரும் நண்பர்களாகயிருப்போமா?" என்று கேட்டது நாய்.

"தடையென்ன தம்பி! நன்றாக இருப்போம்" என்றது பசு.

"அக்கா! அப்படியானால் எனக்குக் கொஞ்சம்பால்தருகிறாயா? நீ தரும் பால் மிகவும் சுவையாக இருக்கிறது. எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. தினந்தோறும் மீனாக்கா ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தருகிறாள். ஆனால் எனக்கு அது பற்றவில்லை. அதற்குமேல் தர அவளுடைய அம்மா ஒப்புக்கொள்ள மாட்டாள். நீ கொஞ்சம் மனம் வைத்தால் முடியும் ஒருவருக்கும் தெரியாமல் குடித்துவிட்டுப்போய் விடுகிறேன்" என்று நாய் கெஞ்சியது.

"தம்பி! நீ மனந் திறந்துபேசியதைக் கேட்க எனக்கு இரக்கமுண்டாகிறது. நீ உலகந் தெரியாத சிறுவன். உனக்குப் புத்தி சொல்ல வேண்டியது என் கடமை. தம்பி! எஜமானத் துரோகம் செய்யக்கூடாது. பாவங்களிளெல்லாம் பெரிய பாவம் அது தான். என்னுடைய வளர்ச்சிக்



காகப் பிண்ணுக்கு, பருத்திக்கொட்டை, தவிடு, புல், வைக்கோல் முதலிய வகை வகையான உணவுகளை எனக்குத் தருகிருர்கள். அந்த நன்றியை மறந்துவிடலாமா? அதனுல் சுவைமிக்க பாலை அவர்களுக்குக் கொடுக்கிறேன். அவர்களுக்குத் தெரியாமல் பால் தருவது குற்றமாகும். அவர்கள் விரும்பாததை நான் செய்யலாமா? நீயே யோசித்துப்பார்" என்று பசு பாடஞ் சொல்லியது.

"அக்கா! ஏதோ ஆசையாயிருந்தது கேட்டேன். நீ என்னைக் காட்டிலும் பெரியவள். நீ சொல்வதிலும் ஏதோ உண்மையிருப்பதுபோலத்தான் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்'' என்றது நாய்.

"தம்பி!உனது புத்திசாலித்தனத்தைமெச்சுகிறேன். நான் உனக்குச் சொல்லித் தரும்பாடம் ஒன்றேயொன்றுதான். எப்பொழுதும் எஜமானனிடம் அன்பாயிரு. அவர்களுக்குக் கனவிலும் துரோகம்செய்ய எண்ணுதே''என்று பசு நாய்க்கு வாழ்த்துக் கூறியது. பின்னர் பசுவும் நாயும் தத்தம் இடத்திற்குப் பிரிந்து சென்றன.

நாட்கள் பல கழிந்தன. மீனுளும் மீனுட்சியாக மாறி கண்ணைக் கவரும் பெண்ணுகக் கல்யாணத்திற்குத் தயாராக இருந்தாள். நாயும் அழகாக வளர்ச்சியடைந்திருந்தது. ஆனல் பசுவிற்கோ வயதாகிவிட்டது. இந்தவிதமாகக் காலம் எல்லா இடங்களிலும் மாறுதலை உண்டாக்கிவைத்திருந்தது!

வழக்கம்போலப் பசுவோடு சற்று நேரம் பேசிவிட்டு வரலாமென்று எண்ணி, நாய் பசுநிற்குமிடத்திற்கு வந்தது. பசு கண்களில் கண்ணீர் தேங்க நின்றுகொண்டிருந்தது.

"அக்கா, அக்கா, ஏன் அழுகிருய்?"என்று நாய் உருக்கமாகக் கேட்டது.

"தம்பி, இந்த மனிதர்களெல்லாம் நன்றி கெட்டவர்கள். நம்மால் பயன் கிடைக்கும்வரைதான் நம்மைக் கவனிப்பார்கள். நாம் தளர்ச்சியடையுங்காலத்தில் நம்மைக் கைவிட்டு விடுவார்கள்" என்றது பசு.

"என்ன அக்கா, வகை வகையான உணவு தருகிருர்களென்று சொன்னுயே!'' என்றது நாய்.

"தம்பி! அதெல்லாம் நான் இளமையாயிருந்தபொழுது அவர்கள் தந்த உணவெல்லாம் எனது வளர்ச்

சிக்காகவென்று எண்ணினேன். அது தவறு தம்பி தவறு! பருத்திக்கொட்டையையும் வைக்கோலையும் பாலாக்கும் இயந்திரமாகத்தான் என்னைவைத்துக்கொண்டிருந்திருக்கிறார்களென்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. ஆம்! இயந்திரம் பழுதடைந்துவிட்டது. இனிமேல் அதை யேன் கவனிக்கப் போகிறார்கள்?" என்று அழுதது பசு.

"அப்படியானல் இப்பொழுது உனக்குப் போதுமான உணவு கிடைக்கவில்லையா?" என்று கேட்டது நாய்.

"தம்பி உணவுகிடைக்காவிட்டாலும் பரவாயில்லையே! எனக்கு வயதாகி விட்டதாம். நான் இப்பொழுது உணவுக்குக் கேடாகவும் பூமிக்குப் பாரமாகவும் இருக்கிறேனும் இனிமேல் என்னுடைய தோல்மட்டுந்தான் பயன்படுமாம். அதற்காக என்னை ஒரு சக்கிலியனிடம் விலை பேசி வைத்திருக்கிறார் நம் எஜமானன்"

"அவனாவது உன்னை நன்றாக வைத்துக்கொள்வானா இல்லையா?"

"அட பைத்தியமே! தோலுக்காக என்னை வாங்குகிறான் என்கிறேன். நன்றாக வைத்துக்கொள்வானா என்று கேட்கிறாயே! என்னைக் கொன்று தோலை எடுத்துக்கொள்வான்"

"ஐயையோ உன்னைக்கொன்று.........?"


"ஆமாம் தம்பி ஆமாம்"

"நீ காட்டிய எஜமான பக்திக்கு இதுதானா அக்கா பரிசு?"

பசு வாய் பேசாது நின்றது. அதன் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே உதிர்ந்தது. நாய் விம்மியது. அந்தச் சமயத்தில் பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு மாட்டைப் பிடிக்க வந்தான் சக்கிலியன். 'வள்' என்று அவன்மேல் நாய் தாவிப் பாய்ந்தது. கையிலிருந்த கம்பால் அதைத் தடுத்துக்கொண்டான் அவன்.

கையில் கம்பும் பையில் பணமும் வைத்திருப்பவனுக்குத்தானே இந்த உலகம் சொந்தம்!

கயிற்றைப் பிடித்து மாட்டை இழுத்துக்கொண்டு போனான். மாடு தயங்கித் தயங்கிச் சென்றது. நாய் குரைத்தது. அழுதது. ஊளையிட்டது. ஓடிஓடி மறித்தது. அதைத் தவிர அது வேறு என்ன செய்யும்? ஆனல் ஆறறிவுபடைத்த ஆறுமுகனரோ சிறிதும் கவலையின்றிப் பார்த்துக்கொண்டு நின்றார்!



தீவே நன்று

— கண்ணதாசன் —

மனித நடமாட்டமற்ற அந்தத் தீவுக்கு, ஆங்கிலேயர்காலத்தில் புது வாழ்வு பிறந்தது. காலடிகாணா அந்தத் தீவின் மண்ணிலும் காலடி காணத் தலைப்பட்டது. கவனிப்பாரற்றுத் தன்னிச்சையாகவளர்ந்து மரங்களில் படர்ந்து கிடந்த கொடிகளில் பச்சைப்பாம்புகள் ஆதிபத்தியம் செய்தன. நேரான வழி என்பதே அபூர்வமாக இருந்தது.

அந்தத் 'தண்டகாருண்ய'த்தில், ஆங்கில ஏகாதிபத்தியம் முதற் குற்றவாளியை இறக்கு

மதி செய்த 21-ஆண்டுகட்குப் பிறகு......

●

வளர்ந்து, பருத்து ஒண்ணரை முழம் தாடியுடனும் மூன்று முழம் முடியுடனும் தோற்றமளித்த 'மனிதன்' ஒருவன், கடலும் தீவும் சந்திக்குமிடத்தில் அமர்ந்திருந்தான். ஆர்ப்பரித்து வரும் கடலலையைப்பார்த்த வண்ணம், முழங்கால் கட்டி அமர்ந்திருந்தான், அவன். குறுகிய எல்லைக்குள்ளே இருபத்தோரு ஆண்டுகளை நகரவிட்டு, வெளியுலகின் நிகழ்ச்சிகளைக் காணக் கண்ணாகி, காய், கனி, கிழங்கு, கந்தமூலங்களில் உயிரை ஒப்படைத்து, வாழ்க்கை ஓட்டத்திற்கு மிக மட்டமான ஒரேவிதச் சூழ்நிலையையே பெற்றிருந்த அவனுக்கு, அந்தக் கடலலைகள் எழுப்பியதெல்லாம் ஒரே உணர்ச்சிதான். அதுவும் தினம் தினம் எழுந்து நாட்களை நகரவிட்டு மரத்துப்போன

உணர்ச்சி. அதில் புதுமை காண முடியவில்லை, அவனால்.

மண்ணில் கொஞ்சம் சாய்வான்; திரும்ப நிமிர்வான்; பக்கத்தில் சாய்வான்; திரும்ப எழுவான். மண்ணை அள்ளிக் கடலில் எறிவான். 'சூள்' கொட்டுவான். நடப்பான் உட்கார்வான். இது அவனின் தினக் கடன். கடந்த இருபத்தோரு ஆண்டுகளுக்குள் பல நூறு கைதிகள் அந்தத் தீவுக்கு வந்துவிட்டார்கள்; அதில் சில பெண்களும் இருந்தார்கள். அவர்களோடெல்லாம் அவன் பழகுவதில்லை. சிலர் அவனிடம் வலிய வந்து தீவின் நிலையைப்பற்றியும், அவன் எவ்வளவு காலமாகத் தீவில் இருக்கிறான் என்பதுபற்றியும், விசாரிப்பார்கள். எல்லாவற்றிற்கும் 'தெரியாது' என்ற பதிலைத்தான் கூறுவான். மற்றவர்கள் அவனுக்குப் பைத்தியம் என்று முடிவு கட்டினார்கள். அவன் அவர்களையெல்லாம் பரிதாபமாகப் பார்த்தான். எல்லாரிடமும் அவனுக்கு இரக்கமுண்டாயிற்று. அந்தத் தீவுக்கு முதல் மனிதன்தான் என்பதிலே அவனுக்கு அலாதிப் பெருமை.

"இருபத்தைந்து ஆண்டுகள் உன்னை அந்தமான் தீவுக்குக் கடத்தியிருக்கிறேன்" என்று அவனுக்கு 'அருள் புரிந்த' நீதிபதியின் வார்த்தைகளை மட்டும் அவன் மறக்கவில்லை. சட்டத்தின் கட்டுப்பாட்டை மீறியதுதான் அவன் செய்த குற்றம்.

சட்டம் "மனிதனை மனிதன் கொலை செய்யக்கூடாது" என்று சொல்கிறது. அவன் கொலைசெய்தான்; சட்டம் தன் கடமையைச் செய்தது. அவன் 'அந்தமான் வாசி' யாகி விட்டான்! பெரும்பகுதிப் பாட்டாளி மக்களை அணுவணுவாகக் கொலை செய்யும் சிறு குழுவினருக்கு அந்தமான் 'சான்ஸ்' கொடுப்பதில்லை. ஒரு முக்கியமான காரணத்திற்காக



"நான், சாகும் வரை இந்தத் தீவிலேயே இருப்பதாக முடிவு செய்து விட்டேன்!" ஏன் அவன் இப்படி எண்ணினான்? தமிழ் நாடு அந்தமான் தீவைவிட அவனுக்குக் கசப்பானேன்? படித்துப்பாருங்கள்.

ஒருத்தியின் வாழ்வைக் கொலை செய்து வந்த ஒருத்தனைக் கொன்ற குற்றத்திற்காக — அவன் அந்தமான் தீவுக்குக் கடத்தப் பட்டான். "எட்டெழுத்துச் சட்டம் என்ன தான் சொன்னாலும, 'சமுதாய நீதி' என்று ஒன்றில்லையா?" என்பதுதான் அவன் கேள்வி.

நிகழ்ந்தது என்ன?

தஞ்சை மாவட்டத்திலிருக்கிறது, பையூர் கிராமம். பழனிச்சாமி சேர்வை அங்கு பெரிய பண்ணைக்காரன். பண்ணைக்காரன் மட்டுமல்ல, அந்தக்கிராமத்துக்கே அதிபதி அவன். 'கதிர் ஒருமுழமே நீளும்; கட்டுமுக்கலமே காணும்' வயல்கள் பல அவனுக்குச் சொந்தம். தனி வாழ்க்கையில் அவன் ஒரு தனியரசுக்காரன். பதினேழு மனைவியர் அவனுக்கு.

அதே ஊரில் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவன், ஏழுமலை. நன்றாகப் படித்தவன். தனக்கு ஏன் 'ஏழுமலை' என்ற பெயர்வந்தது என்பதற்கு அவன் காரணம் சொல்வான்; 'ஏழ்மையிலே' எனபதன்வழூஉ என்று; அவனின் அத்தை மகள் பொன்னி. செதுக்கி வைத்த தந்தச்சிலைபோல் செழிப்பான மேனி; அழகுக்கு மெருகு தரும் அடக்கமான குணம். தன் 'அத்தை பெற்ற ரத்தினம்' தனக்குத்தான் என்று உறுதியாக நம்பினான் ஏழுமலை. ஏழைக்கு 'நம்பிக்கை' என்பது தற்காலிகமான மகிழ்வைக் கொடுக்கும் தென்றல்; தனத்தின் முன்னே ஏழுநாடியும் ஒடுங்கநிற்கும் நாய்க்குட்டி. அதை அறியாதவனல்ல ஏழுமலை. அவன தன்னை நம்பினான். தன் பலத்தை நம்பினான். தன் அறிவை நம்பினான். சுருக்கமாகச் சொன்னால், பொன்னி தனக்கு உறவு என்ற உண்மையின் பலத்தில் வாழ்ந்தான்.

ஒருநாள்...........

ஏழுமலை வீதிவழியாக வந்து கொண்டிருந்தான். அத்தை வீட்டருகில் வந்தான்......

"புத்தம் புதிய மலர்—கண்களில்
பொன்னிறங்காட்டுதடி!
முத்தம்படா உதட்டில்—சகியே
முல்லை மணக்குதடி!"

என்னும் பாட்டு, பெண் குரலில் எழுந்து, அவள் மெல்லுதட்டில் தோய்ந்து வெளிவந்தது. கேட்டது. சற்றுநேரம் அசையாமல் நின்று விட்டான், ஏழுமலை. பின்; தன்னுணர்வு பெற்று அத்தை வீட்டினுள் புகுந்தான். வாசலில் வெற்றிலை இடித்துக் கொண்டிருந்தார், மாமன். உள்ளே கதவோரத்

இல் புல்லுக்கட்டுகள் அடுக்கப் பெற்றிருந்தன. அதனருகில் மாடிக்குப் போகும்படி. ஏறி, மேலே சென்றான், ஏழுமலை. ஏழையின் வீட்டில், மாடி இருக்கக் கூடாதா என்ன! 'மாடி வீட்டு ஏழை' யாக வாழ்ந்தார், ஏழுமலையின் மாமன்.

நாற்காலியில் உட்கார்ந்து பாடிக்கொண்டிருந்தாள், பொன்னி.

'பொன்னி!' என்றான் ஏழுமலை.

'அத்தான்!' – தலையைக் குனிந்து கொண்டால், பொன்னி. அத்தான் அருகில் வந்தாள்.

"புத்தம் புதிய மலர்-கண்களில் பொன்னியைக்காட்டுதடி!"

என்று மெல்லிய குரலில் பாடினான். நாணிக்கண் புதைத்தாள். அவளின் கைகளைப் பற்றி 'பொன்னி' என்றான். அவள் நிமிர்ந்து பார்த்தாள். "காதல் வயப்படும் பொழுது பெண்களின் அழகு அதிகரிக்கிறது' என்று சொன்னவன் அறிஞன். அவன் வாழ்க!" என்றான் ஏழுமலை, மனதுக்குள்ளே. பொன்னியின் தேகம் புல்லரித்தது. பருவம் வந்தபின் அவளது கரங்களை ஒரு இளைஞன் பற்றியது,இது தான் முதல் தடவை. அவளின் முகம் சிவந்தது; இருதயம் துடித்தது. ஏழுமலை குனிந்து 'இதழ்சேர்க்க' முயன்றான்! அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு, 'எச்சித் தழும்பு விழுகும்!' என்றாள். ஏழுமலை சிரித்தான். அவள் புன்முறுவல் பூத்தாள்.

"அப்பா ஏதாவது சொன்னாரா, பொன்னி?" என்றான்.

'ஊஹூம்' - தலையசைத்தாள், அவள்.

'நம்ம கலியாண விஷயமா... ....?' இழுத்தான் அவன்.

'ஒண்ணும் சொல்லலை'-பெருமூச்சு விட்டாள் அவள்.

"ஆமா, எங்கிட்ட எனக்குப் பிரியந்தானெ? நெசத்தைச் சொல்லு?" - அவன் அவசரப்பட்டான்.

குனிந்த தலை நிமிராமல் அவள் சொன்னாள்: 'பிரியம் இல்லயின்னு......' - இன்னும் முடிக்க வில்லை.

'இல்லயின்னு......?' - என்ன அவசரம்!

'நீங்க வந்த உடனே எந்திரிச்சுப் போயிருப்பேன்!'— சொல்லி விட்டுச் சிரித்தாள்.

அவனும் சிரித்தான்.

காதலர்களின் பேச்சுக்கிடையே, காரணமற்ற சிரிப்பு வந்து வந்து விளையாடும்!

அவன் 'பொன்னி!'என்றான். கீழேயிருந்து அந்தக் குரலை அமுக்கும்படி, 'பொன்னம்மா!' என்றொரு குரல் புறப்பட்டது! பொன்னியின் அன்னை அழைத்தாள்.

"இதோ வந்துட்டேம்மா!" என்று மறுமொழி கொடுத்த பொன்னி, "கையை விடுங்க. அம்மா கூப்பிடுறா! "என்றாள்.

அவனுக்குக் கையை விட மனமில்லை: அவளுக்கும் தான்! வேறுவழியில்லை. திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் கீழே இறங்கிச் சென்றாள், பொன்னம்மா.

காலம் மாற மாறக் கருத்தும் மாறுகிறது. நாம் தான் பார்க்கின்றோமே, 1938க்கும்

'48க்கும் எவ்வளவு வித்தியாசம்! அன்று 'சீர்திருத்தம்' என்றால், 'செருப்பு உபசாரம்' நடக்கும். இன்று சீர்திருத்தம் இல்லையென்றால், திரும்பிப் பார்க்கக் கூட ஆளில்லை! காலம், எண்ணத்தை மாற்றுவது. பொது வாழ்வில் மட்டுமல்ல; தனி மனிதர்களின் தனி வாழ்க்கையில் கூடத்தான்.

பொன்னியின் தந்தைக்கு தன்னைப் போல் ஏழையின் வீட்டில் சம்பந்தம் செய்து கொள்ள விருப்பமில்லை. வெகுநாள் வரை, அவரும் 'பொன்னியையும் ஏழுமலையையும் இணைத்து'ப் பார்க்கத்தான் ஆசைகொண்டிருந்தார். ஆனால் பண்ணைக்காரன் பழனிச்சாமி அந்த எண்ணத்தில் மண்ணைவாரிப் போட்டான். பொன்னியின் தந்தைக்கும் சபலம். பணக்காரப் பண்ணைக்காரருக்குத் தன் மகள் வாழ்க்கைப் பட்டால், "நாலுபேருக்குமத்தியில் கௌரவமாக"த் தானும் வாழமுடியும் என்ற அரிப்புத்தான்; வேறென்ன!

உலகின் துன்பங்களெல்லாம் ஒருருவாகி ஏழுமலையைத் தாக்கின.

உலகத்து நதிகளெல்லாம் பொன்னியின் கண்களைப் 'புறப்படும்' இடமாக்கிக் கொண்டன.

"பதினேழும் ஒன்றும் பதினெட்டு! கொட்டடா மேளம்! கட்டுங்கள் தாலியை!"

பெரிய பண்ணைக்காரருக்கும், பொன்னிக்கும் ஐயர் போட்டார், அறுக்கமட்டுமே கூடிய முடிச்சை!

பண்ணைக்காரருக்கு பதினெட்டு மனைவியர் என்றாலும், 'கட்டிய மனைவி'யரில் மூன்றாமவள், பொன்னி.

பொன்னி பண்ணைக்காரரின் 'லாய'த்தில் குடியேறினாள்.

●

ஏழுமலை, பைத்தியம் பிடித்தவன் போலானான். பையூரிலிருக்கவே, அவனுக்குப்பிடிக்கவில்லை.

கையிலிருந்த பதினாறேகால் ரூபாய்களை எடுத்துக்கொண்டு, பையூரிலிருந்து வெளியேறினான். தன்னுடன் படித்த நண்பர்கள், தெரிந்தவர்கள், புதிதாக அறிமுகமானவர்கள் வீட்டில் சில சில தினங்கள் தங்கி, எப்படியோ ஏழு மாதங்களை ஓட்டி விட்டான். இந்த ஏழுமாத இடைக்காலத்தில் பொன்னியையும காதல் நினைவுகளையும்சற்று மறந்திருந்தான்.

ஒரு நாள்............

ஒரு நண்பனின் வீட்டில் சாப்பிட்டுவிட்டு, அலமாரியிலிருந்த புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான்,ஏழுமலை. 'காதல் நினைவுகள்' என்றொரு புத்தகம் கையில் அகப்பட்டது. அதை வைத்துக் கொண்டு சிறிது நேரம் ஏதோ சிந்தனை செய்தான். அதற்குள் அந்த நண்பனும் மேலே வந்தான்.

"சூடாமணி! நான் ஊருக்குச் செல்வதென்று முடிவு செய்துவிட்டேன்!" என்றான் ஏழுமலை.

சூடாமணி, துணியில் கையைத் துடைத்தவண்ணம், "அடே எப்பப்பா இந்தமுடிவு! உனக்கு இந்த முடிவு எப்படி வந்தது?" என்று கேட்டான்.

கையிலிருந்த புத்தகத்தைக் காட்டினான், ஏழுமலை.

"என்னமோ ஊரிலாவது ஒழுங்கா இருந்தாச் சரிதான்" என்றான் சூடாமணி

சூடாமணியிடம் பணம் வாங்கிக்கொண்டு ஊருக்குச் சென்றான், ஏழுமலை.

●

கண் கலங்கி நின்ற தாய் தந்தையர், அவனைக் கட்டியணைத்துக்கொண்டனர். "இனி எங்கும்போகமாட்டேன்" என்று ஆறுதல் கூறினான் அவன்.

நாட்கள் சில, நகர்ந்துசென்றன. பொன்னியைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை ஏழுமலையின் மனதில் வளர்ந்து தழைத்திருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்பொன்னி தன் தாய் வீட்டிற்கு வருகிறாள் என்று தாய் மூலம் கேள்விப்பட்டான். அத்தை வீட்டுக்குச் செல்லவேண்டுமென்று அவனுக்கும ஆசைதான். ஆனால் ஏழுமலைக்குப் பொன்னியைக் கொடுக்காததால், ஏழுமலையின் பெற்றோர் சாமியை வேண்டிவிட்டார்களாம்! இனி அத்தை வீட்டில் காலடி எடுத்துவைக்கக் கூடாதாம்! சாமி அடிவயிற்றில் குடிபுகுந்து அரிப்பாராம்! சாமிக்குத்தான் வேறுவேலை என்ன!

ஏழுமலை யோசித்தான்; அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஒண்ணேகால் பணமோ, அதிகமாய்ப்போனால் ஆறேகால் ரூபாயோ கொடுத்துவிட்டால் சாமி தானே கொண்டுபோய் வீட்டில் விடுகிறார். அதற்கும் முடியவில்லை என்றால், சாமியைத் தூக்கி அப்புறம்வைத்து விட்டுப் போகலாம் என்று நினைத்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை...

அத்தை வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தான் அவன்.

"வாப்பா, எங்கே ரொம்ப நாளாக்காணம்?" என்று நிமிர்ந்தது நிமிர்ந்தபடி கேட்டார், மாமன்.

"சும்மா......... இப்டி........."

விஷயத்தை விளக்கிக் கூற அவன் விரும்பவில்லை.

"என்னமோ, காலா காலத்துலே கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு சௌக்கியமா இரு. உன் ஆத்தாவும் அப்பாவுந்தான் இந்தப்பக்கம் வர்றதே இல்லெ. சாமியே வேண்டிவிட்டார்களாம். என்னமோ நடக்கட்டும். ஆதாம் பொன்னி இப்படிக்கஷ்டப்படுது. எல்லாத்துக்கும பிராப்தம் வேணும்!" என்று அங்கலாய்த்தார் மாமன்.

ஏழுமலைக்கு எல்லாம் புதிராகத் தோன்றியது.

"பொன்னி எங்கே மாமா?" என்று ஆசையோடு கேட்டான் ஏழுமலை.

"மேலே படுத்துருக்கு!" என்று சலித்தார், அவர்.

பொன்னி, படுத்திருந்தாள்; தாய் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள். ஏழுமலை வந்தான்.

"அத்தை!"

"தம்பீ!"

"அத்தான்!"

மூன்று குரல்கள் மோதித் தெறித்தன! கட்டிலருகில் ஓடிவந்தான், ஏழுமலை. கண்கலங்கிக் கிடந்தாள், கட்டழகி. அவளது இடது கன்னத்தில் காயம் பட்ட வடு இருந்தது. தலைமயிரில் ஒருபகுதி பிய்த்தெடுக்கப்பட்டிருந்தது.

ஏழுமலை அழுது விட்டான்-

"அத்தை! பணம் பணமென்று அழுதீர்களே! பாருங்களேன் பொன்னியை!"

பொன்னி விம்மி அழுதாள்.

அமைதியடைந்து, ஆறுதல் கூறினான், ஏழுமலை.

கொடுமை கண்டு குமுறும் நெஞ்சத்தோடு இரவு நோக்கிக் காத்திருந்தான், ஏழுமலை.

பரிதியை மலைமுழுங்கிற்று; பகலை இரவு துரத்திற்று.

இரவு பன்னிரண்டு மணி.

பண்ணையார் வீட்டில் அலறல் கேட்டது.

மூன்று 'அழகிகள்' விதவைகளாயினர்!

ஏழுமலை கைதியானான்!

வழக்கு நடந்தது.

"காதலியைக்காக்க அவள் கணவனைக் கொல்வது காதலியைக் காப்பதற்குப் பதில், அவள் வாழ்வையே குலைத்துவிட்டது" என்றார் நீதிபதி.

"அவளை நான் காப்பாற்றுவேன்; அல்லது வேறு ஒருவருக்கு மணம் செய்து வைப்பேன்!"

"சட்டம் அனுமதிக்காது!"

"பகுத்தறிவுக்குச்சட்டம் ஒரு வேலியா?" அவன் வாதத்தை ஏற்பவர் அங்குயாரும இல்லை.

"ஏழ் நூற்றாண்டு அந்தமான் வாசம்; கடத்திச் செல்லுங்கள்!" — கருப்பு உடையில் கட்டளையிட்டார், நீதிபதி.

பூவிழந்து, பொலிவிழந்து, பொன்னணியிழந்து புத்தாடை யிழந்து, 'வாழ்ந்தும் வாழா' விதவையர் கூட்டத்தில் சேர்ந்தாள், பொன்னி.

●

கையில் ஒருபிடி மண்ணெடுத்துக் கடலுள் எறிந்துவிட்டு, "நேற்றுவரை இங்கிருந்த மண், இன்று கடலுக்குள்ளே!" என்றான் ஏழுமலை.

புதிதாகத் தீவுக்கு வந்த பெண்ணொருத்தி, அவனருகில் வந்தாள்.

"ஏன் ஒருவருடனும் நீங்கள் பேசுவதில்லை?" என்று கேட்டாள்.

அவன் மண்ணை அள்ளி அள்ளி வீசிக் கொண்டே சிரித்தான். பின் கேட்டான்.

"நீயும் தமிழ்நாட்டுப் பெண்தானே?"

"ஆமாம்!"

"தமிழ்நாடு இப்பொழுது எப்படியிருக்கிறது?"

"அப்படியே தானிருக்கிறது!"

"கிழவர்களுக்கு இளம் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்கிறார்களா?"

"கொடுக்கிறார்கள்!"

"பணக்காரர்கள் ஆதிக்கம் இருக்கிறதா?"

"இருக்கிறது!"

"அப்படியானால்......?"

"என்ன?"

"நான், சாகும்வரை இந்தத் தீவிலேயே இருப்பதாக முடிவு செய்து விட்டேன்!"

கடலோரத்தில் அவன் நடந்தான்.

அவள் அப்படியே நின்று கொண்டிருந்தாள். ○

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET. PUDUKKOTTAI.

தமிழக இலக்கிய வெளியீடு:

இன்ப இரவு

நாக. முத்தையா

★

இது ஒரு கவிதை நூல். வெறும் கற்பனையை மட்டும் துணையாகக் கொண்டு எழுதாமல், சமுகத்தை முன்னே நிறுத்திக்கொண்டு சிந்தனையை ஓடவிட்டுச் சித்தரிக்கப் பெற்ற கவிதைகள், கோயில் பூசாரியின் கோலாகல லீலைகளைக் கவிதை மூலம் அமைத்துக் காட்டுகிறார் ஆசிரியர். எளிய சொற்கள்- இன்பநடை போட்டம் - சமுகச் சீர்திருத்தம் - அனைத்தையும் உணர்ச்சியுடன் எடுத்துக்காட்டும் "இன்ப இரவு," திராவிட மக்களுக்கு இன்பமூட்டி மகிழ்விக்குமாறு, அழகிய ஆர்ட் அட்டையுடன் வெளியிடப்பட்டுள்ளது

விலை 0-3-0

தபாற் செலவு 0-0-9

வியாபாரிகளுக்குக் கழிவு 25 %

செந்தமிழ்ப் பதிப்பகம்

த. பெ. 39.

புதுக்கோட்டை